பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2034 | மார்கழி 29 | செவ்வாய்க்கிழமை | (13-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 25




# சமாதானத்தின் விரோதிகளை சர்வதேசம் உணர்ந்துவிட்டது

## சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

**இலங்கையில் சிங்களத் தலைமைகளுக்கிடையே இடம் பெற்றுவரும் அரசியல் இழுபறிநிலைமை காரணமாக சமாதான முயற்சிகள் தாமதமடைந்து செல்கின்றன. இந்நிலையில் சமாதானத்தின் விரோதிகள் யார் என்பதை இன்று சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது. இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

புலிகளின் குரல் நடுவப் பணியகத்தின் அமலன் கலையரங்கில் நேற்று மாலை நடைபெற்ற புலிகளின் குரலின் மாதாந்த சிறப்பு முத்தமிழ் கலையரங்கு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் பொதுச் சுடரை ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

அவர் மேலும் கூறியதாவது, இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளே சமாதானத்தின் விரோதிகள் என சர்வதேசத்திற்குக் காட்டி வந்தது. சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் அனுசரணை வழங்கிவரும் இன்றைய சூழ்நிலையில் தென்னிலங்கையில் (12ஆம் பக்கம் பார்க்க)

## உள்வரும் அழைப்புகளுக்கு இலவசம்

## அழைப்பை ஏற்படுத்துபவர்களே அதிக கட்டணம் செலுத்த வேண்டும்

(கொழும்பு)

கைத் தொலைபேசிகளில் தொடர்பை ஏற்படுத்துபவர் மட்டும் பணம் செலுத்தும் முறை விரைவில் அமுலாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உள்வரும் அழைப்புக்கள் முற்றிலும் இலவசமாக்கப்படும். இதற்கு பதிலாக அழைப்பை ஏற்படுத்துபவர் மேலதிக பணம் செலுத்த வேண்டியிருக்கும் என தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் தெமியா குருளே தெரிவித்தார்.

இது நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டதற்குக் காரணம், ஜனாதிபதி ஊடக அமைச்சை பொறுப்பேற்றது அல்ல. இது முற்றிலும் (12ஆம் பக்கம் பார்க்க)

## சுவீடன் நாட்டு எதிர்க் கட்சியினர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு



தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சுவீடன் நாட்டுப் பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று கிளிநொச்சியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் இடம் பெற்ற இச்சந்திப்பை அடுத்து சுவீடன் நாட்டு பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை அரசினதும் விடுதலைப்புலிகளினதும் சமாதான (12ஆம் பக்கம் பார்க்க)

## அரைக்கும் இயந்திரத்தில் சேலை சிக்கி பெண் மரணம்

## வடமராட்சி அம்பனில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

நெல் குற்றுவதற்காக அரிசி ஆலைக்குச் சென்ற வயோதிப மாது ஒருவர் அரைக்கும் இயந்திரத்தில் சேலை சிக்கியதால் தூக்கியெறியப்பட்டு பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியிலுள்ள அரிசி ஆலை ஒன்றில் நேற்றைய தினம் காலை இடம் பெற்ற மேற்படி சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னையா பாக்கியம்(வயது69) எனும் வயோதிப மாதுவே மரணமானவராவார்.

நெல் குற்றுவதற்காக அரிசி ஆலைக்குச் சென்ற வேளை அரைக்கும் இயந்திரத்தில் பிரஸ்தாப பெண்ணின் சேலை சிக்கியதால் அவ்விடத்திலிருந்து அவர் தூக்கி எறியப் (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிப் பெண் போராளிகளின் முகாமினுள்

## புலிப் பெண் போராளிகளின் முகாமினுள்
## கண்காணிப்பு குழு அனுமதியின்றி புகுந்தது

(திருகோணமலை)

திருகோணமலையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவு முகாம் ஒன்றினுள் எதுவித முன்னறிவித்தலோ, அனுமதியோ இன்றி நுழைந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருவர் முகாம் போராளிகளினால் திருப்பி அனுப்பப்பட்டதாக திருகோணமலை மகளிர் அரசியல் துறைப்பிரிவினர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கடந்த 6ம் திகதி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ள பெண்கள் முகாம் ஒன்றினுள் எதுவித அறிவித்தலும் இன்றியும், அனுமதியின்றியும் உட் பிரவேசித்தனர்.

முகாம் வாசலில் காவல் கடமையில் இருந்த எமது போராளிகள் அவர்களை உட்செல்லவிடாது தடுத்து நிறுததினார்கள்.

இது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரால் எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போது எமது அனுமதியன்றி முகாமுக்குள் நுழைந்தது தவறு என்றும் அதனாலேயே

(12ஆம் பக்கம் பார்க்க)

பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் இடம் பெற்ற

கையில்,

இலங்கை அரசினதும் விடுதலைப்புலிகளினதும் சமாதான

(12ஆம் பக்கம் பார்க்க)

## காரணம் எதுவும் கூறாமல் யாழ்.நூலகத்தை திறக்குக
### மாநகர ஆணையாளருக்கு யாழ். ஆயர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

தென்கிழக்காசியாவிலேயே சிறந்த நூலகமாகத்திகழ்ந்த யாழ். நூலகத்தின் இன்றைய நிலை தமிழ் மக்களின் நலனையும் மேம்பாட்டையும் விரும்பும் அனைவருக்கும் வேதனையைத் தருவதாக இருக்கிறது.

இவ்வாறு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

1953ஆம் ஆண்டு அடிக்கல்லிடப்பட்ட இந்த நூலகத்திற்கு முன்னாள் பத்திரிசியார் கல்லூரி அதிபர் லோங் அடிகளார் பெரும் பங்களிப்புச் செய்திருந்தபோதும் 1954இல் அவர் இலங்கை மண்ணைவிட்டு வெளியேறிய போது இந்த நூலகம் நிறைவு செய்யப்படவில்லை என்ற மன ஏக்கத்துடனேயே சென்றார். 1981ஆம் ஆண்டு இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட போது தாவீது அடிகளார் அந்த அதிர்ச்சியில் மரணமானார்.

1985இல் அரச படைகளால் இந்நூலகம் மீண்டும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டமை தமிழ்

(12ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலை நடத்தும் தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை
## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. எனினும் பொதுத் தேர்தல் நடத்துமாறு விடுக்கப்பட்டுவரும் கோரிக்கைகள் குறித்து பரிசீலித்து வருகிறோம்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து ஊவா, வட மேல் மாகாண சபைகளின் பிரதிநிதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் உரையாற்றும் போது ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது,

எதிர்வரும் 27ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்படவுள்ளதாக வெளியான தகவல்கள் முற்றிலும் பொய்யானவை. பொதுத் தேர்தலை நடத்துவதா? இல்லையா? என்பது குறித்து இதுவரை தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. தேர்தல் நடத்துமாறு பல்வேறு தரப்புக்களிடம் இருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிககும் ஜே.வி.பிக்குமிடையிலான கூட்டு ஒப்பந்தம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி கைச்சாத்திடப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (த)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**சிறு விளம்பரம்**

**English Classes**

ஆங்கில மொழிமூல பட்டதாரி ஆசிரிய தேர்விற்கான வகுப்புக்களும் G.C.E A/L (2006)ற்கான General English வகுப்புக்களும் பல்கலைக்கழக மாணவர்க்கான ஆங்கில மொழி தேர்ச்சி வகுப்புகளும் 14.01.2004ல்ஆரம்பம.தொடர்பு கோ.சுப்பிரமணியம் இல.62, பழம் றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(8095)


## அடிக்கடி மின்வெட்டு

(நவாலி)

கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய பகுதிகளில் தற்போது அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதன் காரணமாக அப்பகுதி மக்களும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

(உ-102)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின் முஸ்லிம் மக்களுக்கு அவலநிலை

## சமயத் தலைவர்கள் கருத்து

(கொழும்பு)

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான யோசனைகளையும் கருத்துக்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தாமதமின்றி வெளியிட வேண்டும் என முஸ்லிம் சமயத் தலைவர்கள் கேட்டுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 1997ஆம் ஆண்டு தெரிவித்த தென் கிழக்குப் பகுதிக்கான முஸ்லிம அமைவு குறித்த கருத்தைவிட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் வெளியிடப்படும் யோசனைகள் மேம்பட்டதாக இருக்கவேண்டும்.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஐ.என்.சுகைப முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கடந்த இரு ஆண்டுகளாக அதன் யோசனைகளை சமர்ப்பிக்காதது குறித்து ஆச்சரியம் வெளியிட்டுள்ளார்.

மேற்படி கட்சி தமிழீழவிடுதலைப்புலிகளுடன் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தில் இவ் யோசனைகள் ஏன் உள்ளடக்கப்படவில்லை?

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை தனிப்பட்டநபர்களினாலோ அன்றி தனிப்பட்ட குழுக்களினாலோ முன்னெடுத்துச் செல்ல முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம். பௌஸி கருத்துத் தெரிவிக்கையில,

விரிவான பேச்சுவார்த்தைகள் மூலம் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்விமான்கள், ஏனைய பிரமுகர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்.

தங்களது தனிப்பட்ட யோசனைகளை சமர்ப்பித்து அரசியல் இலாபம்பெற எவரும் முற்படக்கூடாது எனவும் எச்சரித்துள்ளார். இவ்வாறு முனைவார்களேயானால் அது முஸ்லிம் மக்களின் பாதுகாபபையும், அபிலாஷைகளையும் பாதிக்கும் என்றார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.ஏ.யௌபார் கருத்துத் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அதன் முன்னாள் அரசியல் தலைவர்களுடனும் கல்விமான்களுடனும் கலந்தாலோசனை நடத்திய பின்னரே முஸ்லிம்கள் தொடர்பான திட்டவரைபினைத் தயாரித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னரே முஸ்லிம் மக்கள் பெரும் இன்னலகளுக்கு ஆளானார்கள்.

இந்த நிலையில்தான் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் யோசனைகள் ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும் என்றார்.

(தி)

# இலங்கை அரசியல் மாற்றங்கள் குறித்து அமெ.இராஜாங்க திணைக்களத்திற்கு அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் தொடர்பான அறிக்கை ஒன்றினை இலங்கைக்கான அமெரிக்கத தூதுவர் ஜெபரிலண்ஸ்டெட அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களதிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டின் மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரம சிங்க சமாதான முயற்சிகளைத் தன்னால் தொடர முடியாது எனவும் அதனைக் கைவிடப் போவதாகவும் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இவ்வாறான அரசியல் குழபபங்களை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் அடங்கிய கடிதங்கள் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலினால் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருடாக பிரதமர் ரணில் மற்றும் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோரிடம் தனித்தனியே கையளிக்கப்பட்டிருந்தன.

இதன தொடர்ச்சியாகவே மேற்படி அரசியல் மாற்றங்கள் குறித்த அவதானிப்புகள் அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன், உத்தியோக பூாவ விஜயமாக தற்போது நாடு திரும்பியுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரிலண்ஸ்டெட் அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் மற்றும் இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து இதுவிடயமாக விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இலங்கையின் அரசியல் மாற்றங்கள் குறித்து அதிசிரத்தை கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இது விடயத்தில அதிகாரம் கலந்த தொனியில் ஆலோசனைகளை வழங்கி வருகின்ற இந்த நிலையில் அயல் நாடான இந்தியாவும் தனது பங்கிற்கு ஆலோசனைகளை அடுக்கடுக்காகக் கூறி வருகின்றது.

இந்த வகையில், அரசியல் நெருக்கடி காரணமாகப் பொதுத் தேர்தலை நடத்தினால் புலிகளே நனமை அடைவார்கள் என்று கூறி, பொதுத் தேர்தலுக்குச் செல்லாது அரசியல் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ளுமாறு இலங்கை ஜனாதிபதிக்கு இந்தியா ஆலோசனை வழங்கியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-4)

# சுவீடன் பா.உ.க்கள் இன்று யாழ்.வருகின்றனா

(யாழ்ப்பாணம்)

சமூக அபிவிருத்திக்கான ஆய்வுச் செயலகத்தின் அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ள சுவீடன் நாடடுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத் திட்டங்களைப் பார்வையிடுதல், இங்குள்ள நிலைமைகளை நேரில் பார்த்தறிதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இங்கு வருகைதரும் இக்குழு யாழ்.அரசாங்க அதிபர் மற்றும் யுனிசெவ் அதிகாரிகள் ஆகியோரைச் சந்திக்கவுள்ளனர்.

இதேவேளை, மேற்படி குழுவினர் நேற்றைய தினம் கிளிநொச்சி நடுவப் பணியகத்தில் வைத்து புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியிருப்பதுடன், நேற்று முன்தினம் புத்தளம் சென்று வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தமை தெரிந்ததே.(உ-16,43)

# பரிதாப நிலையில் துணுக்காய் கல்வி வலய மாணவர்கள்

(மருதங்கேணி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிலவுகின்ற மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிவிர்த்தி செய்யப்படாத நிலை தொடர்ந்தால் மாணவாகளின் கல்வி நிலையில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் என துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் மா.தேவேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

துணுக்காய் கல்வி வலயத்தில் 678ஆசிரியர்கள் தேவைப்படும் இடத்தில் 395ஆசிரியர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர். மீதி 283ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை.

இதனடிப்படையில் ஆங்கிலப் பாடததிற்கு 94ஆசிரியர்கள் தேவையான இடத்தில் 6ஆசிரியர்களும் கணித பாடத்திற்கு 36ஆசிரியர்கள் தேவையான இடத்தில் 14 ஆசிரியர்களும் விஞ்ஞான பாடத்திற்கு 39ஆசிரியர்கள் தேவையான இடத்தில் 16ஆசிரியர்களும் உடற்கல்விக்கு 17ஆசிரியர்கள் தேவையான இடத்திற்கு ஒரே ஒரு ஆசிரியரும் மட்டுமே உள்ளனர்.

இந்நிலை மிகவும் மோசமானது. இந்த வகையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் காண்பது என்பது மிகவும் கடின

# பொப்வெப் செயற்றிட்டம்

நிலைமைகளை நேரில் பார்த்தறிதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இங்கு வருகைதரும் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தமை தெரிந்ததே.(உ-16,43)

## போதைப்பொருள் விழிப்புணர்வு செயற்றிட்டம் வெற்றிகரமாக அமுல அருண்மாஸ்ரர் திருப்தி தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த போதைப்பொருள் ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு செயற்றிட்டம் தமக்குப் பூரண வெற்றியைத் தந்திருப்பதாக தமிழீழ கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்ரர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரகாலமாக மன்னார் மாவட்ட மக்களிடையே தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினால் போதைப்பொருள் விழிப்புணர்வு செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டு வந்தது.

இச்செயற்றிட்டத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் மன்னார் நகரசபை மண்டபத்தில நேற்றுமுன்தினம நடைபெற்றன.

மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அமிர்தாப் தலைமையில் நடைபெற்ற இவ் இறுதிநாள நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியபோதே அருண்மாஸரர் இதனைத தெரிவித்துள்ளார். இவ விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தை நெறிப்படுத்திய போராளிகள், தமிழர் புனர்வாழ்வு கழகப் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப் பேரவையினர் ஆகியோருக்குப் பாராட்டும் சான்றிதழ்களும் இவ் இறுதிநாள நிகழ்வில வழங்கப்பட்டன. (உ-4)

## பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு

(யாழ்ப்பாணம்)

முதுபெரும தமிழ்ப் பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம் எழுதிய "பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு" நூல் வெளியீட்டு விழா தைப்பொங்கல் தினமான எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை பிப.4.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சி.சிவமகாராஜா தலைமையில இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை ஈழநாடு ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த பூ.நகுலனும் ஆசியுரையை மூதறிஞர் தி.ச.வரதராசனும், வாழ்த்துரைகளை பேராசிரியர் அசண்முகதாஸ், கலாநிதி க.சொக்கலிங்கம், பேராசிரியர் க.சிவச்சந்திரன், புலவர் ம.பார்வதி நாதசிவம் ஆகியோருமே நிகழ்த்தவுள்ளனர். ஆய்வுரையைக் கலாநிதி க.குணராசாவும் சிறப்புரையை சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவும் ஆற்றவுள்ளனர். (உ)

## பொப்வெப் செயற்றிட்டம் வடக்கு-கிழக்கில் அறிமுகம்

(மருதங்கேணி)

வடக்கு-கிழக்கிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி பயிலும ஆரம்பக் கல்வி மாணவர்களின் வாசிப்புத் திறனை விருத்திசெய்யும் நோக்குடன் "பொப்வெப்" எனப்படும் விசேட செயற்றிட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளது என மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

தெரிவுசெய்யப்பட்ட சில பாடசாலைகளில் கடந்த ஆண்டு இத்திட்டம் பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றியளித்துள்ளது. இதனையடுத்தே வட-கிழக்லும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் பிரகாரம் ஆரம்பப் பாடசாலைகளில் சிறுவர் நூலகம் ஏற்படுத்தப்பட்டு ஆரம்ப கல்விச் சிறார்களை கவரும் விதத்தில் கதைப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன. (தி-35)

## அம்டா நிறுவன ஏற்பாட்டில் எக்ஸ்-கதிரியக்க சேவை

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் எக்ஸ்-கதிரியக்க சேவையினை அம்டா நிறுவனத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

வாரத்தில் மூன்று நாட்கள் அதாவது செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் மாவட்ட வைத்தியசாலையில் இச்சேவையினை அம்டா நிறுவனம் வழங்கி வருகின்றது.

இவ் வைத்தியசாலையில் இயங்கிவந்த எக்ஸ்-கதிரியக்க இயந்திரம் பழுதடைந்தமையின் காரணமாக எக்ஸ்-கதிரியக்க சேவை தடைப்பட்டிருந்தது. இதனால் நோயாளிகள் இச் சேவையைப் பெறுவதற்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கும் செல்ல வேண்டிய துர்ப்பாக்கியநிலை இருந்து வந்தது.

இப்போது அம்டா நிறுவனம் இந்த எக்ஸ் கதிர் சேவையை வழங்கி வருகின்றதையடுத்து மேற்படி மக்களின் அவலநிலை தீர்ந்துள்ளது. (உ-5)

இந்நிலை மிகவும் மோசமானது. இந்த வகையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் காண்பது என்பது மிகவும் கடினமான ஒன்றாகவே உள்ளது.

விசேட பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறை அதிக அளவுள்ளமையினால் தேசிய ரீதியாக நாம் இந்நிலைபற்றி கல்வி அமைச்சுக்கு பல தடவைகள் தெரியப்படுத்தியும் இப்பற்றாக்குறை நிவிர்த்தி செய்யப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-35)

## அணைக்கட்டு இடிந்து வீழ்ந்தது

(கொழும்பு)

வலப்பனை நீர்த்தேக்க அணைக்கட்டின் ஒருபகுதி நேற்று முன்தினம் காலை இடிந்து வீழ்ந்துள்ளதால் 3 பேர் காணாமல் போயுள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

உடமாதுர என்னும் இடத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 50ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

அத்துடன், 300 ஏக்கர் நெற்காணிகள் அணைக்கட்டின் மண் குவியல்களினால் மூடப்பட்டுள்ளன.

காயமடைந்தவர்கள் அனைவரும் வலப்பனை, பேராதனை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (தி)

பொதுசன ... யாழ்ப்பாணம்

# ஸ்ரீ.சு.கவுடன் இணைந்து புலிகள் சமாதான முயற்சியைத் தொடர்வர்?

## பாலாவின் வருகை பிற்போடப்பட்டமைக்கு இதுவே காரணம் என்கின்றனர் அரசியலாளர்கள்

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முனைப்புடன் செயற்பட்டு வருவதாக கொழும்பில் இருந்து வெளி வரும் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

பாதுகாப்பு அமைச்சை தன்வசம் வைத்துள்ள எந்த ஒரு தென் இலங்கை அரசுடனும் புலிகள் இயக்கம் பேச்சு வார்த்தைகளை நடத்தத் தயாராக இருக்கின்றது என தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தகவல் வெளியிட்டிருந்தார்.

இதனை அடுத்தே விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்த ஜனாதிபதியின் முழு ஆசீர்வாதத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முனைப்புடன் செயற்பட்டு வருகிறதாகக் கூறப்படுகின்றது.

இதனடிப்படையில் தற்பொழுது லண்டன் பயணமாகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீர அங்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்த முயற்சி செய்துவருவதாகவும் அப்பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தான் பொறுப்பேற்ற பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மூன்று அமைச்சுப் பொறுப்புக்களையும் மீண்டும் தன்வசம் ஒப்படைக்காத பட்சத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்புக்களை அவரிடமே ஒப்படைக்கப்போவதாக கடந்த 7ஆம் திகதியன்று பண்டுவஸ்நுவர என்னுமிடத்தில் இடம்பெற்ற மாபெரும் மக்கள் பேரணியில் கலந்து கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிரடியாக அறிவித்திருந்ததும், இதனை தான் தோன்றித்தனமானதோர் முடிவு என விமர்சித்து ஜனாதிபதி செயலகம் அறிக்கை விடுத்திருந்ததும் தெரிந்ததே.

இது இவ்விதமிருக்க தென்னிலங்கையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் குடுமிச் சண்டை காரணமாகத் தோன்றியிருக்கின்ற ஸ்திரமற்ற அரசியல் நிலைமையைக் கருத்தில் கொண்டு, நோர்வேத் தரப்பின் பரிந்துரைக்கமைவாகவே விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் இலங்கை வருகை கால வரையறையின்றிப் பிற்போடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்ற போதிலும் அதற்கும் அப்பால் சமாதான முன்னெடுப்புக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் இலண்டன் சென்றுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை சந்திப்பதன் நோக்கம் ஒன்றிருப்பதாகவும் அதனாலேயே வருகை பிற்போடப்பட்டிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபட ஆரம்பித்துள்ளது.

(உ-4)



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையால் நடாத்தப்பட்ட திருவாசக விழாவில் சிறப்புச் செற்பொழிவாற்றிய தமிழ்நாடு பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகளாருக்கு இந்து கலாசார அமைச்சர் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.



திருவாசக விழாவை முன்னிட்டு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவியொருவருக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் பரிசில் வழங்குகிறார்.

(படங்கள்:சு. கணபதிப்பிள்ளை)



## வறிய முயற்சியாளர்களுக்கு தொழில் உபகரணங்கள்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலக பிரிவில் உள்ள ஐந்து வறிய தொழில் முயற்சியாளர்களுக்கு ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்களை சமுர்த்தி அதிகாரசபை வழங்கியுள்ளது. காரைநகர் பிரதேச செயலக பிரிவினுள் வீட்டு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடமும் ஏனைய நால்வருக்கு தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நடமாடும் தண்ணீர் விற்பனை வண்டிகளும் வழங்கப்பட்டன.

அதேவேளை காரைநகரின் கடந்த வருடம் சமுர்த்தி அதிகார சபையின் மக்கள் கருத்திட்டத்தின் கீழ் மருதபுரம், தோப்புக்காடு ஆகிய கிராமங்களுக்கு தலா 55ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டு இரு கிணறுகள் அமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-246)

## பெரியவிளான் பகுதியில் சுகாதார வசதிகள் இல்லை

(சுதுமலை)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பெரியவிளான் பகுதியின் அடிப்படைச் சுகாதார வசதிகள் இன்றி அம் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

இது தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு பிரதேச சபைச் செயலாளர் பி.விக்ரர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் கடந்த 25வருடங்களிற்கு மேலாக இப்பகுதியில் மலசலகூட வசதி, குடிநீர்ப் பிரச்சினைகள் போன்ற பலவற்றை இம் மக்கள் எதிர் நோக்கி வருட அபிவிருத்தித் திட்டத்தில் கிராம அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஆவன செய்யுமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இந்து சமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரனுக்கும் இக்கடிதத்தின் பிரதி அனுப்பப்பட்டுள்ளது.

(தி-252)

## ஜே.வி.பி.-ஸ்ரீ.சு.க. கூட்டை எதிர்ப்போர்

டங்களிற்கு மேலாக இப்பகுதியில் மலசலகூட வசதி, குடிநீர்ப் பிரச்சினைகள் போன்ற பலவற்றை இம் மக்கள் எதிர் நோக்கி வருவதாக அப்பகுதியில் உள்ள பல சனசமூக நிலையங்கள் கடிதம் அனுப்பியுள்ளன.

எனவே வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள இம் மக்களின் நிலையைக் கருத்தில்கொண்டு இவ்

## இரங்கற் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் மற்றும் வரதராஜேஸ்வரக் குருக்கள் ஆகியோர் அமரத்துவம் எய்தியதையிட்டு, ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இரங்கற் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு கோயில் மண்டபத்தில் திருமதி ம. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது. (தி-18)

## குப்பைக் குவியல்

(சுழிபுரம்)

சுழிபுரம் சத்தியக்காடு சந்தையில் சூழலை மாசுபடுத்தும் வகையில் உள்ள கழிவுப் பொருட்கள் பல நாட்களாகியும் அகற்றப்படாமல் இருந்து வருகிறது.வலி. மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சுழிபுரம் சத்தியக்காடு சந்தையின் மையப்பகுதியில் குவிக்கப்பட்ட நிலையிலுள்ள கழிவுகள் இரு மாதகாலமாகியும் இதுவரை அதேயிடத்தில் அப்புறப்படுத்தப்படாமல் இருந்து வருகின்றன. (தி-71)

# கூட்டை எதிர்ப்போர் அதிருப்திக்கு ஆளாகும் நிலை

(கொழும்பு)

மாக்ஸிஸ வாதிகளான ஜே.வி.பியுடன் கூட்டுச் சேரவேண்டாம் என ஜனாதிபதியை வலியுறுத்தி கையெழுத்துக்களை திரட்டி வந்த சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர, சந்தன கதிரியாராய்ச்சி ஆகியோர் தற்போது எதிர்ப்பைச் சந்தித்துள்ளனர்.

இவர்கள் இதுவரை 15 கையொப்பங்களை திரட்டியுள்ளதுடன் 60 கையொப்பங்களை திரட்டுவதே இவர்களின் நோக்கமாகும்.

ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பது பற்றி இறுதி முடிவு எடுக்க முன்னர் ஏனைய கட்சி அங்கத்தவர்களுடன் கலந்துரையாடவேண்டுமென ஜனாதிபதியை இவர்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை, ஜே.வி.பியுடனான கூட்டணிக்கு ஆதரவான வரும் பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினருமான ரெஜி ரணதுங்க மேற்கூறிய இரு உறுப்பினர்களும் தமது முயற்சிகளை கைவிட வேண்டும் என்றும் இவர்கள் கூட்டணிக்கு எதிரானவர்கள். இவர்களின் முயற்சி சுதந்திரக்கட்சியின் சிறந்த எதிர்காலத்தை சீர்குலைக்கும்.

இக்கூட்டணி அமைவது சுதந்திரக் கட்சி அரசியல் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ள இவ்வேளையில் முக்கியமானது. இதை யாரும் தடுக்க முயலக்கூடாது. சுதந்திரக்கட்சியை தோற்கடிப்பதை நாம் விரும்பவில்லை.

நாட்டின் 2வது பெரிய கட்சி என்ற அந்தஸ்து சுதந்திரக் கட்சிக்கு கிடைக்காது விடக்கூடும். ஜே.வி.பியினர் தமது அரசியல் எதிர்காலம் கருதி இக்கூட்டணியை ஏற்படுத்த முனைகிறார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒரு சிறிய கட்சி, தனது கட்டளைகளின் படி ஜனாதிபதி தேர்தல்களை மாற்றவேண்டுமென ஒரு நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜன்பதிபதிக்கு காலக்கெடு விதிக்கக்கூடாது. எத்தகைய தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டுமென வற்புறுத்தக்கூடாது. ஜனாதிபதி அரசியல் யாப்பிற்கமைவாக செயற்படுகிறார். இதையாரும் குழப்ப முயலக் கூடாது என்று பாரத லக்ஷ்மன் பிரமேச்சந்திர சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ-6)





**52வது சேனையகம் அமைந்துள்ள பகுதியில் வசிக்கும் மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து தீர்வு காணும் வகையில் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி சுசில் சந்திரபால தலைமையில் 524 படையணி 'அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடல் காட்சிகள்.**

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

13

## அறிமுகம்

இந்துக்கோயில்களின் சொத்துடைமைகள், வருமானங்கள் தொடர்பான சீர்கேடுகள் பற்றிச் சபையோர் ஆராய்ந்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 50 கோயில்களிற் 10 ஆலயங்கள் மிகுந்தளவு வயல் நிலங்களையும் தோட்டங்களையும் கொண்டுள்ளன என்றும், ஆலய பரிபாலனத்திற்கும் பொறுப்பான தேசத்து வன்னியரும் வண்ணக்கரும் அவற்றின் வருமானங்களைக் கையாடிக்கொள்வதாற் குடியானவர்களிடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளதென்றும் சில தலைமைக்காரர் முறைப்பாடு சொன்னார்கள். பொதுமக்களினாலே தெரிவு செய்யப்படுவோரைக் கொண்ட கோயிற் பரிபாலன முறையினை ஏற்படுத்தக் கூடிய வண்ணமாகச் சட்டமியற்ற வேண்டும் என்றும் ஆலோசனை கூறினார்கள்.

வட மாகாணத்திலே பெருந்தொகையான இந்துக்கோயில்கள் உள்ளனவென்றும், அவற்றுட் சிலவற்றுக்கு 3 ஆயிரம் ரூபாய் முதல் 4ஆயிரம் ரூபாய் வரையான வருமானம் ஆண்டு தோறும் கிடைக்கிறதென்றும்,அதனை முதலாளிகள் திருப்பணி வேலைகளுக்கு போதிய அளவிலே பயன்படுத்துவதில்லை என்றும் யாழ்ப்பாணத்துத் தலைமைக்காரர் சுட்டிக்காட்டினார்கள். ஆலய பரிபாலனம், சொத்துடைமைகள் என்பன தொடர்பாகச் சட்டம் மூலம் சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்ற கருத்து சபையோரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

கோயில்களில் நடைபெறும் மிருகபலி பற்றியும் சபையோர் ஆராய்ந்தனர். மிருகபலி சிவாகம விதிகளுக்கு முரணானதென்றும், அதனால் இந்து சமயத்தவருக்கு பெரும் மாசு ஏற்படுத்துகிறது என்றும் தலைமைக்காரரிற் சிலர் கூறினார்கள். மிருகபலி செய்யும் வழக்கத்திற்கெதிரான பொதுசன அபிப்பிராயம் ஏற்பட்டு வருகிறதென்றும் சிலர் தெரிவித்தனர். ஆயினும், சட்டம் மூலம் அதனைத் தடைசெய்வதற்குத் தேசாதிபதி உடனடியாக இணங்க முடியாது என்றார்.

அந்நாட்களிலே கதிர்காமத்திற்குப் பெருந்தொகையான மக்கள் யாத்திரை போவது வழக்கம். கோயில் நிர்வாகத்திற்குப் பொறுப்பான நிலாமை அடியார்களின் மூலமாக கோயிலுக்குக் கிடைக்கும் வருமானங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்வது வழமை. ஆனால்,யாத்திரிகரின் வசதிகள் குறித்து ஒன்றும் செய்வதில்லை. பெருந்தொகையான மக்கள் கூடுவதனால் அங்கு தொற்று நோய்கள் பரவக்கூடிய சூழ்நிலை காணப்பட்டது. சொற்பமான அளவிலே சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்கும் பொறுப்பினை அரசாங்கம் மேற்கொண்டிருந்தது. யாத்திரிகரின் எண்ணிக்கையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக அனுமதிச் சீட்டுக்களை வழங்கும் முறையினை அரசாங்கம் தொடங்கியிருந்தது. ஆயினும் , ஆலயச் சுற்றாடலில் உள்ள நிலைமைகளை நிலாமையின் ஒத்துழைப்பின்றி அரசாங்கத்தினாற் கட்டுப்படுத்த முடியவில்லை.

வடமாகாணம்,கிழக்கு மாகாணம் ஆகியவற்றில் இருந்து கணிசமான தொகையினர் கதிர்காமத்திற்கு யாத்திரை போவதால் அந்த விடயம் தொடர்பாக எத்தகைய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள முடியம் என்பது பற்றிச் தேசாதிபதி தலைமைக்காரருடன் ஆலோசனை பண்ணினார். தேவாலயத்து நிலாமையைப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு வேறொருவரை நியமிக்கவேண்டும். எனவும் நிலாமை கோயிற் சுற்றாடலிலுள்ள சுகாதார வசதிகளைக் குறித்து எதுவிதமான பொறுப்புகளையும் மேற்கொள்ளாத வரை கதிர்காமம் போகும் யாத்திரிகரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்காக கடவுச்சீட்டுக்களை வழங்கும் முறை பின்பற்றப் படவேண்டும் என்றும் தலைமைக்காரர் ஆலோசனை கூறினார்கள்.

அந்நாட்களிலே,யாழ்ப்பாணக்குடாநாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலே யானைகள் மிகுந்தளவிலே காணப்பட்டன. வயல் வெளிகளிலும் தோட்டங்களிலும் பயிர்களுக்கு அவை பெரும் சேதம் விளைவிப்பது உண்டு. யானைகளைக் கைப்பற்றி அயல் நாட்டு வர்த்தகருக்கு விற்பனை செய்தனர். தென்னிந்திய வணிகரே அவற்றை வாங்கிக் கப்பல்களில் ஏற்றிச் சென்றனர். ஆந்திரதேசத்தில் உள்ள ஹைதராபாத் வரை அவற்றைக் கொண்டு சென்று விற்பனை செய்தனர். இந்தியாவிலே பெரும்பாலும் அவற்றைக் கோயில்களிலே பயன்படுத்தினார்கள். யானை ஒன்றை 1500 ரூபாய் முதல் 2000 ரூபாய் வரையான தொகைப்பணத்திற்கு இந்தியாவில் விற்றுக்கொள்ளமுடிந்தது. யானைகளைப் பிடிப்பதற்கு அரசாங்கம் அனுமதிச் சீட்டுக்களை வழங்கியது. அத்துடன் விற்பனை வரியினையும் அறவிட்டது. அவற்றுள் ஒவ்வொன்றுக்குமுரிய கட்டணங்களை 200 ரூபாவாக அரசாங்கம் அதிகரித்தது. அதனால் யானைகளைப் பிடிப்பதற்கென அனுமதிச் சீட்டுக்களைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்வோரின் தொகை மிகவும் குறைந்தது. அதனால் எழுந்த பிரச்சினைகளைச் சபையோர் ஆராய்ந்தனர். அனுமதிச் சீட்டு வழங்குவதற்கான கட்டணத்தை 50 ரூபாவாகக் குறைக்க வேண்டும் என்று தலைமைக்காரர் தேசாதிபதிக்கு ஆலோசனை கூறினார்கள்.

கல்வி முறையிலே தொழிற்பயிற்சி சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்னும் விடயம் பற்றியும் சபையோர் ஆராய்ந்தனர். பாடசாலைகளில் எழுத்து,வாசிப்பு, கணிதம் ஆகியன மட்டுமே போதிக்கப்படுகின்றன என்றும் மாணவர்கள் அவற்றில் இருந்து வெளியேறியதும் அவர்களாற் தொழில் புரிய முடிவதில்லை என்றும் தலைமைக்காரர் குறை கூறினார்கள். மரவேலை , உலோகத்தொழில்கள், கட்டடவியல் முதலிய துறைகளிலே பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்றும், கொழும்புத்துறை, கோப்பாய், தெல்லிப்பழை, கல்முனை ஆகிய விடங்களிலே மிஷனரிமார்களால் நடத்தப்படும் தொழிற் பயிற்சி நிலையங்களினால் நன்மைகள் ஏற்படுகின்றன என்றும் தலைமைக்காரர் கூறினார்கள்.

தலைமைக்காரரின் பிராந்திய சபைகளைக் கூட்டும் முறை பின் வந்த தேசாதிபதிகளினாலே முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. அதனால், எல்லாப் பிராந்தியங்களிலும் வாழும் மக்களின் நலன்களையும் கருத்திற்கொண்டு செயற் படக்கூடிய அரசியல் அமைப்பு விருத்தி பெறுவதற்கான வாய்ப்பினை இலங்கை இழந்துவிட்டதென்று கருதவேண்டியுள்ளது.

(தொடரும்)

**வலம்புரியின் அனுசரணையுடன்**
வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
**இராசையா சோமசுந்தரம்**
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்

**கவிதைப் போட்டி -2004**

**1ம் பரிசு தங்கப் பதக்கம்**
**2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்**
**3ம் பரிசு வெண்கலப் பதக்கம்**
*இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்*

விடயம்
**"தமிழா உனக்கேன் இக்கதி"**

**விதிகள்**
- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

**உங்கள் கவிதைகளை**
**கவிதைப்போட்டி-2004**
**வலம்புரி**
இல-15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

**இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த**
**கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்**
**அலுவலகப்பாவனைக்கு**

முழுப்பெயர்.......................
.......................
தபால் முகவரி.......................
.......................
பிறந்த திகதி.......................
தே.அ.அ. இல .......................
மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

.......... ..........
திகதி போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை
இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

.......... ..........
திகதி போட்டியாளர்கையொப்பம்

[stamp]

# பாதாள உலக கும்பல் தலைவர் 2 மில்லியனுக்கு விலை பேசப்பட்டார்

## நீதிமன்ற விசாரணையில் கொலையாளி வாக்கு மூலம்

(கொழும்பு)

பாதாள உலகக் குழுவின் தலைவரான தம்மிக்கவை கொலை செய்த சமிந்த என்பவர், தான் தம்மிக்கவை கொல்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டவர் என மஜிஸ்ரேட் விசாரணைகளின் போது தெரிவித்திருக்கிறார். சமிந்த இராணுவத்திலிருந்து விட்டோடிய ஒருவர். இறுதியாக குருவிட்ட இராணுவ முகாமில் சேவையாற்றியுள்ளார். பிறின்ஸ் என்ற பெயரைக் கொண்ட இனனொரு பாதாள உலகக் குழுவின தலைவராலும் நன்கு அறியப்பட்டவர். அத்துடன் வேறொரு பாதாள உலகக் குழுததலைவரான குடுலால் என்பவருடன் நெருங்கிய கூட்டாளியாகவும் இவர் இருந்துள்ளார்.

கொலையாளி சமிந்த,திஸ்ஸ என்பவரால் தம்மிக்கவைக் கொலை செய்ய ஒப்பந்தம் செயயபபட்டவராவார். திஸ்ஸ எனபவர் குடுலால் என்பவரால் வாடகைக்கு அமர்த்தப்பட்டவர் என்றும் தெரிவிககப்படுகிறது. கடந்த வெள்ளி இரவு திஸஸ, குடுலால் ஆகியோரின் வீடுகளை பொலிஸார் சுற்றிவளைத்த போது அவர்கள் இருவரும் தலைமறைவாகியுள்ளனர் இந்த ஒப்பந்தத்திற் காக சமிந்தவிற்கு 2 மில்லியன் ரூபாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்டதற்கு முதல நாள இரவு சமிந்த, வீடியோ காமினி என்பவரின் வீட்டில் ஒரு விருந்துபசாரத்தில் கலந்து கொண்டிருந்தார். அங்கு அவர் தனது இரு பிள்ளைகளையும் கவனித்துக் கொள்ளுமாறு கூறி அழுதிருககிறார். அத்துடன் கொலை நடந்து 2மாதங்களில் அவரை விடுவிப்பதாக அங்கு அவருக்கு உறுதியளிக்கப்பட்டது.

வடியோ காமினி என்பவர் பாலதுறையின் சமாதானக்குழு ஒன்றின் அங்கத்தவர் என்றும், அப்பிரதேச மாகாண சபை உறுபினருக்கு நெருக்கமானவர் என்றும் தெரிவித்துள்ள பொலிஸார் இவரையும் இவ்விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட ஏனைய மூவரையும் தேடிவருகின்றனர். திஸ்ஸவும பாலத்துறையை சேர்ந்தவர். இவர் குதிரைட் பந்தய நிறுவனங்களுடன் தொடர்புடையவர். கொல்லப்பட்ட தம்மிக்க ரெலிகொம் நிறுவனத்தலைவரும கிரிக்கெற்சபைத் தலைவருமான திலங்க சுமதிபாலவின் வழக்கில் 2 வது எதிரியாகக் குறிப்பிடப்பட்டவராவார்.

கொலைக்கு முதல் நாளான வியாழனன்று நீதிமன்றில் தம்மிக்க ஆஜர் செய்யப்பட்டார். திலஙக சுமதிபால சுகவீனம் காரணமாக அன்று நீதிமன்றுககுச் சமுகமளிக்கவில்லை. மறு நாள வெள்ளியன்று வேறு ஒரு கொலைக் குற்றத்திற்காக தம்மிக்க மீண்டும் நீதிமன்றில்ஆஜர் செயயபபட்டார். கொலையாளி சமிந்த தனது சப்பாத்தினுள் மறைந்து வைத்திருந்த துப்பாக்கியால் தம்மக்கவை சுடும் போது என் சகோதரன் சஞ்சீவவை நீ கொன்றதற்காக உன்னைக கொல்கிறேன் எனக் கூறியிருக்கிறார். ஆனால் பொலிஸ் விசாரணையின் போது சமிந்தவிற்கு அவ்வாறான ஒரு சகோதரன் இல்லை என்றும் சஞ்சீவவுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அறியப்படுகிறது.

ஆனால், தம்மிக்க தனது குற்றத்தை ஒப்புக்கொள்ள விருந்தார் என சிறைச்சாலை வட்டாரங்கள் ஊகம தொிவிக்கின்றன. திலங்க சுமதிபாலவின் விசாரணை வழக்கில் தம்மிக்கவின் சார்பில் பொ.ஐ.முன்னணியின் உயர் மட்டத்துடன் நெருங்கியவர்களான ஜனாதிபதி சுட்டத்தரணி ஜயம்பதி விக்ரம ரட்ன, கஸ்ரன் ஜயக்கொடி ஆகியோர் ஆஜராக இருந்தமை சில வட்டாரங்களில் பீதியை தோற்றுவித்திருந்ததாக ஊகங்கள் வெளியாகியுள்ளது.

இதேவேளை, அரசியல் கொலைகள், குற்றச் செயல்களிலிருந்து தம்மிக்கவை விடுவிக்க அவரின் ஆதரவுக்கட்சியான ஐ.தே.மு தவறியிருநதது எனக் கூறப்படுகிறது.

முக்கிய சந்தேக நபரான தமமிக்க அமரசிங்க கொலை செய்யப்படடதால் இவர் சம்பந்தப்பட்ட பத்தேகன சஞ்சீவவின் கொலை உட்படப் பல கொலை விசாரணைகள் கடுமையாகப் பாதிக்கப்படக் கூடும் என நீதித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றமை தம்மிக்க கொலையுண்டவுடன் அவரின் பொக்கற்றிலிருந்து 15 நிறுவனங்களின் அறிமுக அடடைகள் கண்டெடுக்கப்பட்டன. இவை அனைத்தும் தம்மிக்க சிறைக்குள் இருந்து வைத்துக் கொண்ட தொடர்புகள் என்பதால் இதன் மூலம் பல பயன்மிக்க தகவல்கள் கிடைக்கலாம் எனப் பொலிஸார் நம்புகின்றனர்.

(த-6)

### பாடசாலை சொந்த இடத்தில் ஆரம்பம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள வெற்றிலைக்கேணி கிராம அலுவலா பிரிவிலுள்ள பாடசாலையொன்று 13 வருடங்களின் பின்னர் மீண்டும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கிலுள்ள வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்கப பாடசாலையே கடந்த 13 வருடங் காலமாக இயங்காமலிருந்து தற்போது மள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வைபவத்தில் வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம், வெற்றிலைக்கேணி பங்கு தந்தை மற்றும் மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி ரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பாடசாலை 1991 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து செம்பியன்பற்றில் இயங்கி வந்தது. அத்துடன், 1995 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடம்பெயர்வினால் இப்பாடசாலை மீண்டும் இயங்காமல் மூடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(தி-35)

### வாய்க்கால் புனரமைப்பு

(மருதங்கேணி)

உலக உணவுத் திட்ட அனுசரணையுடன் உலகதரிசன நிறுவனத்தினரால் கிளிநொச்சி இரணைமடுக் குள இடது, வலது கரை வாய்க்கால்களின புனரமைப்பு பணிகள் அப்பகுதி விவசாய மக்களின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(தி-35)

### நிதி உதவி

(மருதங்கேணி)

அமெரிக்க பொருண்மிய மதியுரையகத்தினர் மற்றும் அமெரிக்க வாழ் தமிழ் மக்களினால் கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறு வனததின கட்டுமாணப் பணிகளுக் கென நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கிளி. மாவட்ட தொழில் நுட்ப நிறுவனத்தின் தற்காலிக விரிவுரை மண்டபம் அமைப்பதற்கு அமெரிக்க வாழ் தமிழ் மக்களினாலும், அமெரிக்க பொருண்மிய மதியுரையகத்தினராலும் 5 ஆயிரம் அமெரிக்க டொலாகள் நிறுனவ முதல்வர் த. பிரபாகரனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

(தி-35)

### சுகாதார சேவை ஊழியர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்க உதவி மற்றும் துணை வைத்திய அதிகாரிகள் சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக எச்சரித்துளளனர்.

வைத்திய அதிகாரிகளுக் கிடையில இருந்துவரும் சம்பள முரண்பாடுகளை அரசாங்கம் நியாயமான முறையில் தீர்க்காது விட்டால் இப்போராட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும.

சுகாதார அமைச்சு அலுவலகத்தது முன்னால் இவ் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் உண்ணாவிரதப் போராட்டம் நாளை புதன்கிழமைக்குப் பின்னர் எவ்வேளையிலும் ஆரம்பிக்கப்படலாம் என தாதிமார் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம முதல் ஆரம்பிக்கப்பட்ட இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென இதுவரை 16 சுற்றுப் பேச்சுவார்ததைகள் நடைபெற்றன. ஆனால் இவை எதுவும் பயனளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(தி)



அண்மையில் அம்பாள் கலைமன்ற முன்பள்ளியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், மாணவன் ஒருவருக்கு யாழ்.கல்வி மேம்பாட்டுப்பேரவைப் பொறுப்பாளர் கவியன்பன் பரிசில் வழங்குகிறார்.

(படம்:இ.ரதீஸ்குமார்)

# சிம்பாப்வே கிரிக்கெற் அணியை வெற்றி கொண்டது ஆஸி.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் மூன்று நாடுகள் பங்கு பற்றும் முமமுனை ஒரு நாள் சர்வதேச கிரிக்

முதல் 5 விக்கெற்றுக்களையும் 17 ஓட்டஙகளுக்கே இழந்து பெரும் இக்கட்டான நிலையில் இருந்தபோது

அணியை படுதோல்வியில் இருந்து மீட்டனர்.

இதில், கீறஸிக் 46 ஓட்டங்களையும்,

## யாழ். மாவட்ட ரீதியில் உதைபந்தாட்ட அணி தெரிவு

யாழ்.மாவட்ட ரீதியில், 30 பேர் கொண்ட உதைப்பந்தாட்ட அணியொன்று முதல் கட்டமாகத் தெரிவு செய்யப்படவுள்ளது.

இதன்மூலம் எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதியில் நடை பெறவுள்ள தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவில் நடைபெறவுள்ள உதைபந்தாட

செய்யவுள்ளதாகவும் மேலும் தெரிவித்த அவர் எதிர்வரும் 17,18 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் வலிகாம ஆகிய மூன்று பகுதிகளில் இருநதும இந்த முதல் கட்டத் தெரிவுகள இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் மூன்று நாடுகள் பங்கு பற்றும முமமுனை ஒரு நாள் சா்வதேச கிரிக்கெற போட்டித் தொடரில் நேற்று முன்தினம நடைபெற்ற சிம்பாப்வே அணிகெக்திரான போட்டியில் அவுஸ்திரேலிய அணி 99 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இதன்படிதான் விளையாடியுளள 2 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ள அவுஸ்திரேலிய அணியானது 11 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கின்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணியினா் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கி நிா்ணயிக்கப்பட்ட 50 ஓவா் முடிவில் 8 விக்கெற் இழப்பிற்கு 225 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனா். இதில், அவுஸ்திரேலிய அணி தனது முதல் 5 விக்கெற்றையும் 118 ஓட்டங்களுக்கு இழந்து இக்கட்டான நிலையரில் இருநதபோதும் அன்ரூ சைமன்சும், மைக்கல் கிளாக்கும் சிறப்பாகத் துடுபபெடுததாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை ஓரளவு உயா்த்தினா்.

இதில் அன்ரூ சைமன்ஸ் 42 ஓடடங்களையும் மைக்கல் கிளாக் 40 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்திருந்தனா். பந்து வீசசில் சோன் அா்வீ 54 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 விக்கெற்றுக்களையும் அன்ரூபிளிக்நோட் மற்றும் கிளான் பிளவா் தலா 2 விக்கெற்றுககளையும் கைப்பற்றியிருந்தனா்.

பின்னா் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி தனது முதல் 5 விக்கெற்றுக்களையும் 17 ஓட்டஙகளுக்கே இழந்து பெரும் இக்கட்டான நிலையில் இருந்தபோது அவுஸ்திரேலய அணியிடம் படுதோல்வியை தழுவப் போகிறது என எதிா்பாா்க்கப்பட்டது.

இதில் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளா் பிரெட் வில்லியம்ஸ் தனது முதல் 15 பந்து வீச்சுக்களிலேயே சிம்பாப்வே அணியின் 4 விக்கெற்றுக்களை கைப்பற்றியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் இதன் பின்னா் ஜோடி சோ்ந்து சிம்பாப்வே அணித்தலைவா கீற்ஸ்ரீக்கும் உபதலைவா் டட்டானியா டைபுவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 6 விக்கெற்றுககு இணைப்பாட்டமாக 73 ஓட்டங்களைப் பகிா்ந்து அணியை படுதோல்வியில் இருந்து மீட்டனா்.

இதில், கீறஸ்ிக் 46 ஓட்டங்களையும், டட்டானியாடைபு 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனா். எனினும் சிம்பாப்வே அணி 126 ஓட்டங்களைளுக்கு தனது சகல விக்கெற்றுக்களையும இழந்தது.

இதில் பிரெட்வில்லியம்ஸ் சிறபபாகப் பந்து வீசி 22 ஓட்டங் களுக்கு 5 வக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருநதாா். ஜெஸன் ஜிலெஸ்பி மற்றும் அனரூ சைமன்ஸ் ஆகியோரும் தலா 2 விக்கெற்றைக் கைப்பற்றியிருநதனா். இப்போட்டியின் சிறப்பாட்டக் காரராக அவுஸ்திரேலிய அணியின்பிரெட் வில்லியம்ஸ்தொிவு செய்யப்பட்டிருந்தாா்.

(உ-68)

# காவலூா் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டி

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள ஊா்காவறறுறை பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகள் எதிா்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாக விருப்பதாக ஊா்காவற்றுறை உதவி அரசாங்க அதிபா் ஜே.எஸ். செல்வ நாயகம் அறிவித்துள்ளாா்.

இப்போட்டிகளுக்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் குலுக்கல் இலக்கு தீா்மானித்தல் போன்றவை இன்று மு.ப. 10.30 மணிக்கு உதவி அரசாங்க அதிபா் பணிமனையில் நடைபெறவுள்ளன.

மேற்படி கூட்டத்தில் விளையாட்டுக்கழக பிரதிநிதிகளை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடப்பட்டிருப்பதுடன், போட்டிகளுக்கான விண்ணபபபடிவங்களை இதுவரை சமா்ப்பிக்காத கழகங்கள் இக்கூட்டத்திற்கு முன்னதாக சமா்ப்பித்து பங்குபற்றும் வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது எனவும் உதவி அரசாங்க அதிபா் மேலும் தெரிவித்துள்ளாா்.

(உ-68)


செய்யப்படவுள்ளது.

இதன்மூலம் எதிா்வரும் பெப்ரவரி மாத இறுதியில் நடை பெறவுள்ள தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவில் நடைபெறவுள்ள உதைபந்தாடடப் போட்டிகளுக்கான தகுதியான அணி ஒன்றை தெரிவுசெய்யவுள்ளதாக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி தெரிவித்துள்ளாா்.

இத்தெரிவிற்கென 5 பேர் கொண்ட உத்தியோகத்தா்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவா்களே இத்தெரிவுகளை முழுமையாகச் பாணம், பருத்தித்துறை மற்றும் வலிகாம ஆகிய மூன்று பகுதிகளில் இருநதும இந்த முதல் கட்டத் தெரிவுகள இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்துள்ளாா்.

இத்தெரிவுப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள உதைபந்தாட்ட வீரா்கள் அந்தந்தப் பகுதிகளுக்கான விளையாட்டு உத்தியோகத்தா்களைத் தொடாபு கொள்ளுமாறும மாவட்ட விளையாட்டு அதிகாரி மேலும் தெரிவித்துள்ளாா்.

(உ-68)



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 18ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி தோற்து. முதலில் களமிறங்கிய அகூஸ்தயீரேலிய அணி 288 ஓட்டங்கள் அனைதது விக்கெட்டுகளையும் இழந்தது. இந்திய வீரா் அஜீட் அகா்கா் இப்போட்டியில், 42 ஓட்டங்கள் மட்டுமே கொடுத;து 6 விக்கெட்டை வீழ்த்தினாா்.

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஆ[illegible] தொடக்கம் டிசம்பர் வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான ஜூன் மாதப் பலன்கள்.**

## மேடம்



**அச்சுவினி 4 பாதங்கள்- பரணி 4 பாதங்கள். கார்த்திகை முதல் பாதம் வரை-9 பாதங்கள்**

இப்போது 3ல் சனி, செவ்வாய், சுக்கிரன் எதிலும் முன் யோசனையோடு தான் செயல்படவேண்டும். பிரயாணம் அவசரமானது. பூர்வீகச் சொத்து, இதர கடன் விஷயத்திலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். தன்னுடைய செயல் மற்றவர்களுடன் பேதத்தை உண்டாக்கும் அளவு வேகம் உடையது. சகோதர சகோதரிகள் வகை சுபசெலவு உண்டாக்கும். ஒப்பந்தத தொழிலில் உள்ளவர்களுக்கு அடிக்கடி பிரயாணம் இருக்கும். சில புதிய ஒப்பந்தமும் ஏற்படுத்தும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களும் மேல்மட்ட மனிதர்கள் முதல் கீழ்நிலையில் உள்ளவர்களிடம்வரை மிகவும் இணக்கமாக இருப்பர். வழக்குமூலம் பிரயாணம் உள்ளவர்களும் பெரும் பகுதியினர் உள்ள ராசி இது. தொழில் வழி அவ்வளவு பிரகாசமாக இருக்காது. ஆனால் உங்களைக் கீழே கொண்டு போகாது. சிலருக்கு வழக்கு இருந்தும் முடிவு இப்போது இல்லை. முற்பகுதியைவிட பிற்பகுதி மிகவும் சிறப்பாக இருக்கிறது. புதிய உடைகள் பழைய ஆபரணம் மாற்றுவது போன்றவை பெண்களுக்கு முக்கிய பலன்களாகும். இதேநேரம் பெண்கள் தங்கள் ஆரோக்கியத்தில் கவனம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். சகோதர சகோதரிகள் வகையில் சுபச் செலவுகளும் இடம்பெறும் காலம். அரசியல் மனிதர்களுக்கு தனக்கு ஆகாமல் இருந்த சூழ்நிலை மறைந்து பாராட்டும், அதனால் நற்பயனும் உண்டாகும். நீங்கள் வேகமாக இருக்கலாம். நட்பு உறவு இந்த வகையில் நெருங்கிய நிலையை எதிர்பார்க்கவும். தாங்கள் நினைத்ததை சாதனை புரிந்திடுவர். தனக்கு எதிராக காரியங்கள் சிலவற்றை வெளிக்குக் கொண்டுவருதல் மன திருப்திக்கும், அமைதிக்கும் காரணமாகும். மாணவ மாணவியினருக்கு கல்வி பெருமைதரும். இப்போது வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது குடும்பம் உள்ளவர்களுக்கு ஒருபகுதி திருப்தியாக இல்லை. காரியங்கள் தாமதமாகும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு அலுவலக சூழ்நிலைகள் மிகவும் இனிமையாக இருக்கின்றன. விளையாட்டு, தேர்வு, பந்தயம் போன்ற வகையில் அனுகூலமான சூழ்நிலை இருக்கிறது. தொழில் வழியிலும் நிலையான வருவாய், நம்பிக்கைக்குரிய நண்பர்கள் உள்ள காலமிது. தனநிலையில் தன்னிறைவு உடையவர்தான் நீங்கள். சிலருக்கு தொழில் சம்பந்தமான தொடர்புகளினால் அயல் நாடு, வெகுதூரம் பிரயாணமும் உண்டாகும். குடும்ப உறவினில் சுப விஷயங்களும அதன்வழி செலவும் கூட இம்மாதம் நடுப்பகுதியும் கடைப்பகுதியும் உடையதாக இருக்கிறது. கணவன் மனைவி உறவு கவர்ச்சிமிக்கதாக இருக்கும். குழந்தைகள் வகையில் சுபச்செலவும் இருக்கும். இக்காலம் போட்டி, பந்தயம், விளையாட்டு இந்தவழி நன்மைகள் இருக்கின்றன. உறவினர் வகையும் உங்களுக்கு செலவுகளைக் கொடுக்கும். தாய்வழி உறவில் எவரேனும் படுக்கையில் இருத்தல் ஆரோக்கியப் பாதிப்பு உடையவராக இருப்பர். சிலர் நாகரிக வாகனம் வாங்குவது வளமான பூமி, மனை வாங்குவதையும் செய்யும். தொழில் அதிபர்கள் சாதகமாகச் செயல்படுவர். உங்கள் ஆரோக்கியம்தான் கவனிக்கப்படவேண்டியது. பழைய நண்


தல் அல்லது இலாகா மாற்றத்திற்கு வேண்டிய முயற்சியை செய்துகொண்டுதான் இருக்கவேண்டும். பலவழி தனவருவாய் உள்ள தொழில் அதிபர்கள் சிலவழியில் பாதிப்பு அடைவர். காரணம் சனி, தனம் கொடுக்கல் வாங்கல் பிடிப்பாகவே இருக்கிறது. சிலருக்கு முகம், மூக்கு இந்தப் பகுதியில் பாதிப்பு உண்டாக்கவும் செய்யும். குடும்ப பாகப்பிரிவு அல்லது சொத்துவகைப்பிரச்சினை இருந்துகொண்டே இருக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுககு பழைய நெருக்கடி சூழ்நிலை தொடர்ந்து இருக்கத்தான் செய்யும். உளளுரக் குமுறலும் உண்டு. பக்குவமாக நடந்துகொள்வது மிகவும் அவசியம். இதனால் ஏற்படும் சிக்கல்கள்தான் வழக்குவரை செல்லக் கூடும். வார்த்தையைக் காப்பாற்ற அதிக முயற்சி தேவைப் படுகின்றது. குடும்பத்தில் மட்டுமல்ல உங்கள் தொழில் கூட்டு உள்ளவர்களிடமும் தான் இது ஊதயமாகும். உங்

களும் இப்போது இணக்கமாக செயல்படுவர். இந்தராசி ஒப்பந்தம் போன்ற தொழில் உடையவர்களுக்கு பலவகை ஆதாயமும் இருக்கும். புதுவகை மனிதர்கள் சந்திப்பு மனதுக்கு இதமளிப்பதாக இருக்கும். குடும்பப் பெண்களுக்கு பசும்பொன் ஆபரண சேர்க்கையும், புத்தாடைகள் சேர்க்கையும் உண்டாகும். புண்ணிய ஸ்தல பிரயாணம் குடும்பத்துடன் சென்று வருதலும் இருக்கும். குழந்தைகள் தேகம் ஆரோக்கியமானதாக இருக்கும். இனிமையான சூழ்நிலை எல்லோருக்கும் இன்பம் தருவதாக இருக்கும். குழந்தைகள் மகிழ்ச்சி மிக்கவர்கள். புத்திரியர் கல்வி உயர்வும் குறித்தபடி இருக்கிறது. குடும்பத்தில் பெண்களுக்கு வெண்மை, நீலக்கல் ஆபரண சேர்க்கையும் உண்டாகும். வாகன சேர்க்கை, திடீர் பிரயாணம், ஸ்தல தரிசனமும் உண்டாக்கும். ஆரோக்கியத்தில் கவலை இல்லை. கூட்டுத்தொழில் உள்ளவர்களுக்கு பாகஸ்தர்கள் இடையில் பிணக்கு உண்டாக்க வாய்ப்பு இருக்கிறது. குழந்தைகள், மனைவி இந்தவகையில் சிறுசிறு சச்சரவுகள் இடம்பெறும். தெய்வ வழிபாடு மன அமைதியை உண்டாக்கும். கலைத்துறையினர்கள் ஒப்பந்தம், எழுத்துவகையில் எதிர்பார்க்கும் நன்மைகள் அப்படியே ஸ்தம்பித்து நிற்கும். இதற்கு நண்பர்கள் முட்டுக்கட்டையே காரணமாக இருக்கும். சிலசமயம் இவை வழக்காகவும் உருவெடுக்கலாம். மேற்குத்திசை மனிதர்களின் வருகை, பேச்சு

# உங்களுக்கு எப்படி?

கள் வாகனத்தை சீர்செய்ய அல்லது மாற்றியமைக்க செலவு உடையவர்கள் நீங்கள். போட்டி, பந்தயம், சூதாட்டம் போன்றவை தள்ளிவைக்கப்படவேண்டியவை. உறவு கண்ணியம் உடையது. மாணவர்கள் கல்வி வகையில் உச்சக்கட்டத்தைப் பெறுவர். இப்போது கௌரவப் பதவியும் சிலரை வந்தடையும். எழுத்து ஒப்பந்தம் போன்ற நன்மைகள் கலைப்பிரிவினர்களுக்கு உண்டு. தொழில் வழியில் படிப்படியாக முன்னேற்றத்தைக் காணலாம்.

## மிதுனம்



**மிருகசீரிடம் 3,4வது பாதங்கள்-திருவாதிரை 4 பாதங்கள்-புனர்பூசம்-1, 2,3 பாதங்கள் வரை 9-பாதங்கள்.**

உத்தியோகப்பிரிவு ஆண் பெண்களுக்கு இடமாற்றமோ இலாகா மாற்றமோ நிகழ இருந்தது தள்ளிப் போய்விடும். இப்போதைய மாற்றம் திருப்தி அளிக்காது. கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு பணவரவு திருப்தியாக இருக்கிறது. பகைத்துக் கொண்டவர் மீண்டும் வந்து சேருவர். உங்களுக்குத் தொழில் தனவகையில் தாராளப் போக்கு இருந்த போதிலும் கௌரவக் குறைவான வார்த்தைகளை அடிக்கடி கேட்க வேண்டி இருக்கும். இது குடும்பத்திலும், வெளிவட்டாரத்திலும் நிகழத்தக்கதே. பிரயாண முக்கியத்துவம் உள்ள காலமிது என்பதையும் மறக்கக்கூடாது. நடுப்பகுதிக்கு மேல் நீங்கள் பெரிய மனிதர்களை சந்திப்பது, உங்கள் பதவி உயர்வு, இடமாற்றம் சம்பந்தமான முயற்சிகளில் ஒருபகுதி வெற்றியைக் கொடுக்கும். குடும்பவகைக்கு ஆடை, அணிகலன்கள் சேர்க்கையும் திருமணம் போன்ற சுப விஷயங்களுக்குச் செல்வது, விருந்துண்பதும் உண்டாகும். சிலருக்குத் திருமணமும் கூடிவரும். கவர்ச்சிமிக்க காதல், கல்யாண விஷயங்களும் முக்கிய அம்சமாகும். சில வழிகளில் இக்காலத்து குரு நல்ல குடும்ப வாழ்க்கையை அளிப்பவன்; நாகரிகச் சீர் அமைந்த இல்லத்தை உண்டாக்குவான். மஞ்சள்நிற பொருள்கள் மூலம் பெருந்தனம் செல்வ சேர்க்கையாக அளிப்பவர் இந்தக் குரு. சந்தானம் இல்லாதவருக்கு, சந்தான உற்பத்தியைச் செய்யத்தக்கனவாகும். எனவே, பொதுவாக இந்த குரு வெகு சிறப்பாக அமைந்து இருப்பதை அறியலாம். கடுமையான செலவுகள் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. புத்திரர் புத்திரியர்கள் கல்வி அவ்வளவு தெளிவாக இருக்

வகையில் திருப்தி அளிக்கும். உத்தியோகப் பிரிவினர்கள் தொழிலாளர்களுக்கு இது சோதனையான காலமாகும். தேக உஷ்ணம், அசௌக்கியம், மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாதவை. நடுப்பகுதியில் வரவேண்டிய தனம் ஓரளவு குறித்தபடி வந்து சேரும். இதனால் தொழில் வழியை தெளிவாக்கலாம். பழைய கடனில் சிறுபகுதி அடையும். புது நண்பர்கள் சேர்க்கை, பழைய நண்பர்களிடம் வெறுப்பை உண்டாக்கும். பெண்கள் வழி தனம் வேலைக்கு உதவியாக இருக்கும். புத்திர புத்திரியர்கள் உள்ளவர்களுக்குக் கல்வி மேன்மை கவர்ச்சியாக இருக்கும். பிரயாணம் பெருமைமிக்கதே. பூர்வீக பொருள் வகையில் சில மாற்றங்கள் அவசியமாக இருக்கும். விகிதத்தொடர் கடந்து போன காரியங்களில் நன்மையைத் தரும் என எதிர்பார்க்கலாம். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டி இருக்கும். சிலர் புதிய கட்டிடம் கட்டுவது, பழைய இல்லம் புதுப்பித்தல் போன்ற வகையில் செலவு உடையவராக இருப்பர்.

## சிம்மம்



**மகம் 4 பாதங்கள் - பூரம் 4 பாதங்கள்-உத்தரம் 1வது பாதம் வரை - 9 பாதங்கள்**

இக்காலம் லாப வீட்டில் சேர்ந்திருக்கும் கோல்கள் செவ்வாய், சனி, சுக்கிரன். இது சிறப்பான அமைப்பே என்றாலும் உங்கள் ராசிக்கு சாரகிரகம் வேண்டி இருந்தாலும், சனி கணவன் மனைவி உறவிலும்கூட சிலசமயம் கசப்பான அனுபவத்தைப் பெறலாம். ஆரோக்கியம் சுமாரானதே. உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு மேலே குறிப்பிட்ட அத்தனையும் நடப்பதுடன் மேல் அதிகாரிகளுடனான தொடர்பு இடைவெளி உள்ளதாக இருக்கும். கடைசியில் அவசர கால உதவியாக தனம் வந்து சேரும். சனி இப்போது தீமைக்கு உரியவர் அல்ல என்பதையும் கவனிக்க வேண்டும். எனவே, செய்யும் தொழில்வழி முழுவதும் திருப்தியாக இருக்கும். அலைச்சல், அகால உணவு, அகால உறக்கம் உள்ள காலம்தான் இது. தனம் கொடுக்கல் வாங்கல் பிடிப்பாகவே இருக்கிறது. சிலருக்கு முகம், மூக்கு இந்தப் பகுதியில் பாதிப்பு உண்டாக்கவும் செய்யும். குடும்பப் பாகப்பிரிவு, உங்களுக்கு வயிற்றுப்போக்கு போன்ற பாதிப்பு கொடுக்க சுகத்தில் சனி இருக்கிறான். கடைப் பகுதி வழக்கு வேகம் முழுவதும் குறைந்துவிடும் என்பது

எவரேனும் படுக்கையில் இருத்தல் ஆரோக்கியப் பாதிப்பு உடையவராக இருப்பர். சிலர் நாகரிக வாகனம் வாங்குவது வளமான பூமி, மனை வாங்குவதையும் செய்யும். தொழில் அதிபர்கள் சாதகமாகச் செயல்படுவர். உங்கள் ஆரோக்கியம்தான் கவனிக்கப்படவேண்டியது. பழைய நண்பர்கள் சிலரையும் இப்போது பயன்படுத்தி நன்மையைப் பெறுவீர்கள். தொழில் கூட்டு மனிதர்கள், துரித கெதியில் இயக்கம் கொள்வர்.

## இடபம்



**கார்த்திகை 2,3,4ம் பாதங்கள்-ரோகினி 4 பாதங்கள்-மிருகசீரிடம் 1,2, பாதங்கள் வரை-9 பாதங்கள்**

கடன் வழக்கு பிரச்சினைகள் வேகம் தணிந்துதான் இருக்கும். தனித்து இயங்குவதைவிட கூட்டுமுயற்சி கணிசமான நன்மை. தகப்பனார் வகையிலும் ஆரோக்கியச் செலவு உண்டாகும். விவசாயிகளுக்கு பணவரவு, புதிய உறவினர் சந்திப்பு, விருந்துண்பதும் சந்தோசச் செய்தியை அறிவதும் முக்கிய நிகழ்ச்சியாக இருக்கும். தம்பதியர் இடையில் சிறு பூசல் உதயமாகும். இத்தனைக்கும் காரணம் மூன்றாவது மனிதரே. எனவே, உங்கள் கௌரவத்தில் கவனம் எடுத்துக கொளள வேண்டும். காது, பல் சம்பந்தமான பிணி பாதிககவும் வாய்ப்புண்டு. குடும்ப வகையில் மருத்துவச் செலவும் இருக்கவே செய்கின்றது. போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகளில் சிலருக்கு கணிசமான ஆதாயத்தைக் கொடுக்கும். கொடுக்கல், வாங்கலில் பழைய பாதிப்புகள் விட்டபாடில்லை. சகோதர, சகோதரி வகை உறவு தெளிவாகவில்லை. பிரயாணத்தில் தடை இருக்கிறது. பொருள் பெருமை பேச்சைவிடுத்து செயலில் இறங்கவும். தொழிலில் எதிர்பார்த்த வெற்றி உண்டு. நீங்கள் தொழில் வகையில் தனி சிரத்தை உடையவராக இருப்பதால் தேவைகள் அதிகமாக இருக்கின்றன. குடும்பத்துக்கு நாகரிகப் பொருள்வரவு, நாகரிக வாகன சேர்க்கையும் இருக்கின்றன. வாகனவழி தன உயர்வும் உண்டாகும். பழைய கடன் சிலவற்றை தீர்ப்பது, புதிய கடன் பெறுவது போன்ற நன்மைகள் இருக்கின்றன. தொழில் வழியில் அடைபட்டுக்கிடந்த சில விஷயங்களை சீர்செய்வதும் உண்டாகும். குடும்பத்தில் மருந்துச்செலவு சாதரணமாக இருக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு மிகவும் சிறப்பானது. முக்கியஸ்தர்கள் சந்திப்பு, இடமாறு

சந்தானம் இல்லாதவருக்கு, சந்தான உற்பத்தியைச் செய்யத்தக்கனவாகும். எனவே, பொதுவாக இந்த குரு வெகு சிறப்பாக அமைந்து இருப்பதை அறியலாம். கடுமையான செலவுகள் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. புத்திரர் புத்திரியர்கள் கல்வி அவ்வளவு தெளிவாக இருக்காது. அதற்காக செலவுகள் செய்யவேண்டிய அவசியமும் உண்டாகும். தைரிய உயர்வு தன்னம்பிக்கையும் பிறக்கும் காலம். கலைப்பொருட்கள் குடும்ப வகைக்கு சித்திபெறும். சிலர் கலைக் கட்டிட சேர்க்கையும் பெறுவர். போட்டி, பந்தயம், லாட்டரி போன்ற வழியில் திடீர் ஆதாயம் உங்களுக்குக் கிட்டும். புத்திரியர்கள் கல்வி புகழத்தக்க அளவு இருக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு அலைச்சலும் அகால உறக்கமும் உண்டாகும். பிறர் குறை கூறுவது மனதில் ஒருவிதமான திகிலை உண்டாக்கும். கணவன் மனைவி உறவில் சிலசமயம் ஏற்படும் புகைச்சல் உறவினரால் தீர்த்து வைக்கப்படும். குழந்தைகளின் வகை சுபச்செலவு இடம்பெறும். போட்டி, பந்தயம் இக்காலம் கடைசியில் சுமாரான நன்மையைக் கொடுக்கும் என்றாலும் நீங்கள் மற்றவர் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்காத போக்கு இருக்கும். மற்றும் நீங்கள் இப்போது புதுப்புது நண்பர்களைச் சந்திப்பீர்கள். அவர்களால் உபகாரம் இருக்கிறது. இதில் அரசாங்க உயர்மட்ட மனிதர்கள் தொழில் வழக்கு, எழுத்துமூலம், ஆதாயம் இருக்கிறது.

## கடகம்



**புனர்பூசம் 4வது பாதம் - பூசம் 4 பாதங்கள் - ஆயிலியம் 4 பாதங்கள் வரை - 9 பாதங்கள்**

நண்பர்களின் உதவி பெரிதும் தேவைப்படுகிறது. இயந்திர ஸ்தாபனம் செய்வது கட்டிடம் கட்டுவது போன்ற நன்மைகளும் உண்டாகும். கணவன், மனைவி உறவு திருப்தியாக இருக்கும். புத்திரர்கள் வகையில் மட்டும் சற்று இடைவெளி இருக்கும். இதற்குக் காரணம் உறவினர்களின் தூண்டுதலே. இதனால் சுப காரியங்களை தள்ளிப்போடவேண்டியது இருக்கும். மாத நடுப்பகுதிக்கு மேல் திருமணம் போன்ற நிகழச்சிகளில் கலந்துகொள்வது, விருந்துண்பது போன்றவை இருக்கும். வெளியூர்ப் பயணமும் உடனுக்குடன் இருக்கக் கூடியதே. உங்களுக்கு வேண்டாதவர் என நினைத்தவர்

வாஙகல் பிடிப்பாகவே இருக்கிறது. சிலருக்கு முகம், மூக்கு இந்தப் பகுதியில் பாதிப்பு உண்டாக்கவும் செய்யும். குடும்பப் பாகப்பிரிவு, உங்களுக்கு வயிற்றுப்போக்கு போன்ற பாதிப்பு கொடுக்க சுகத்தில் சனி இருக்கிறான். கடைப் பகுதி வழக்கு வேகம் முழுவதும் குறைந்துவிடும் என்பது சுபசார எல்லைச்சனியால் உறுதியாக்கப்படுகிறது. உங்கள் முதலீடுகள் இப்போது பலனளிக்கத் தொடங்கி விட்டன. கடன் சிலருக்கு இருந்த போதிலும் கௌரவம், நாணயம இவைகள் காப்பாற்றப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. தருமஸ்தாபன தன உதவி ஏற்படும். நண்பர், உறவினர் வகைக்கும், அரசியல் அரசாங்க மனிதர்களின் தொடர்பு தொழில் வகை முயற்சிக்குத் துணையாக நிற்கும். பந்தயம், சூதாட்ட ஈடுபாடும் நட்டத்தையே உண்டு பண்ணும். ஆதாயத்தைக் கொடுக்காது. புத்திரியர்வகை சுபச்செலவுகளை தள்ளிப்போட வேண்டியும் இருக்கும். சகோதரன் வகை அவ்வளவாக திருப்தியளிக்க வழி இல்லை. தன்னம்பிககை, தைரியம்தான் இப்போது உங்களுக்குத் தேவை. உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு ஒரே சீரான போக்குதான் இருக்கும். குறிப்பிடத்தக்க பெரிய பலன்கள் ஏதுமில்லை. அரசியல்வாதிகள் தன் கௌரவத்தில் கவனம் செலுத்த வேண்டும். மூன்றாவது மனிதர்களால் கௌரவப் பாதிப்புக்கு வழியுண்டு. கடனும் வழக்குத்தீர்வு காணமுடியாதது. இந்த ராசிக்கு உங்கள் உடன் இருந்தவர்கள் சிலர் இப்போது உங்களுடன் இல்லை. புகழ்ச்சிக்காக செலவிடுவதை தவிர்ககவும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு இடமாற்றம் உண்டு. சீரான போக்கு உடையவர்களாக இருப்பர். குடும்பத்தில் பிணக்கு சலன நிலையை உண்டாக்கும். கலைப்பிரிவு, எழுத்தாளர்கள் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பாராட்டுக்கள் கிடைக்கப்பெறும். மாணவ, மாணவிகளுக்கு கல்வி தரம்உயர்வு, உறவினர், நண்பர்களாலும் பாராட்டப்பெறும். நல்ல கனவுகள் தோன்றும். தொழில் சம்பந்தமான வகையில் இருந்து வந்த வழக்கு, இதர சிக்கல்களையும் ஒரு நல்ல முடிவுக்குக் கொண்டு வரும் காலம் இது. கிரகங்களின் சார பலம் உங்களுக்கு அனுகூலமாக இருப்பதால் நீங்கள் நினைத்தபடியே அவர்களும் இணங்கி வந்துவிடுவர். எழுத்துமூலம் நன்மை ஒப்பந்தம் போன்றவையும் திருப்தியானதே(தொடரும்)

சோதிடமேதை ராமன்

# மதுவின் துஷ்பிரயோகமும்

# அதனால் ஏற்படும் விளைவுகளும்

## மருத்துவ விளக்கம்

இன்று உலகெங்கிலும் பல கொடூரச் செயல்களும் வன்முறைச் சம்பவங்களும், பயங்கரவாதங்களும், கலாசாரச் சீரழிவுகளும் தலைதூக்கியுள்ளது. இதற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் பிரதான காரணங்களுள் ஒன்றாகக் கருதப்படுவது மதுவின் துஷ்பிரயோகம்.

இன்றய நூற்றாண்டில் உலகின் எல்லாப் பகுதியிலும் வாழும் மக்களால் மிகையான அளவில் பயன்படுத்தப்படும் பிரசித்தமான திராவக வகைகளுள் ஒன்று மதுபானம். மதுப்பாவனை அதிகரிப்பே இன்று பல நாடுகள் எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினைகளுள் ஒன்றாக உள்ளது.

சாதாரணமாக அற்ககோல் எனும்போது எதனோல் கருதப்படுகிறது. மருத்துவத்தில் எதனோலானது சில மருந்துப் பொருட்களின் தயாரிப்பில் கணிசமான அளவில் பயன்படுத்தப்படுகிறது. 70% மதுசாரமானது மருத்துவத்தில் தொற்று நீக்கியாகப் (Antiseptic) பயன்படுத்தப்படுகிறது.

எனினும் "அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதற்கிணங்க மிதமிஞ்சிய மதுப்பாவனை பலகெடுதலான விளைவுகளை ஏற்படுத்துகிறது.


உதாரணமாக :-

(I) உடற்தொழிற்பாடும், அங்கங்களும் பாதிப்படைதல்.

(II) மதுபானத்திற்கு அடிமையாதலும், உளவியல் பிரச்சினைகளும்.

### உடற்றொழிற்பாடுகளும், அங்கங்களும் பாதிக்கப்படல்

தொடர்ச்சியான நீண்டகால மதுப்பாவனையால் பல இழையங்களும், அங்கங்களும், உடற்றொழிற்பாடுகளும் பாதிக்கப் படுகின்றன. இப்பாதிப்பானது தனி நபருக்குத் தனிநபர் வேறுபடுகின்றது. இவ்வேறுபாடு தனிநபர் ஒருவரின் பிறப்புரிமை அமைப்பில் தங்கி இருக்கிறது.




### உணவுக்கால்வாய்த் தொகுதி பாதிக்கப்படல

A) ஈரல் பாதிக்கப்படுதல் :- சாதாரணமாக அற்ககோல் ஆனது ஈரல்கலங்களின் இழைமணியினுள ஒட்சியேற்றப்படுகிறது. மிகையான மதுபாவனையால் ஈரல்கலங்கள் பாதிக்கப்படுகிறது. இவ்வீரல் கலங்களைப் புதுப்பிப்பதில் உள்ளெடுக்கும் உணவுப் பொருட்கள் பங்களிப்புச் செய்கின்றன. பொதுவாக Alcohol ஒட்சியேற்றப்படும் போது மிகையான சக்தி பிறப்பிக்கப்படுகிறது (29.3Kjlg or 7Kcallg) இதனால் மிகையாகக் குடிப்பவர்கள் தமது சக்தியின் நிமிர்த்தம் உணவை உட்கொள்வதில்லை. அத்துடன் இவர்களின் உணவுப்பொருட்கள் பயன்படுத்தப்படும் அளவும் குறைவாகும். இதனால் மதுப்பாவனையாளர்களில் போசாக்கு குறைபாட்டுடன் தொடர்புடைய வியாதிகள் ஏற்படுவதுடன், பாதிக்கப்படும் ஈரல் கலங்களை ஈடு செய்வதும் கடினமாகும். இதனால் ஈரலில் பின்வரும் பாதிப்புகள் ஏற்படலாம்.

(I)Fatly liver :- சாதாரணமாக எமது உடலில் பெருமளவு சக்தியைப் பிறப்பிக்கும் அடிப்பொருளாக கொழுப்பு பயன்படுகிறது. கொழுப்பமிலம் ஈரல்கலங்களினுள் ஒட்சியேற்றமடைவதனால் விடுவிக்கப்படும் சக்தியை எமது உடற் கலங்கள் பயன்படுத்துகின்றன. மதுப்பாவனையாளர்களின் பெருமளவு சக்தி எதனோலின் ஒட்சியேற்றம் மூலம் பெறப்படுவதனால், கொழுப்பமிலம் ஈரல்கலங்களில் செறிவடைகிறது. விளைவாக ஈரலின் பருமன் அதிகரிப்பதுடன் (Hepatomegaly) நாளடைவில் அவற்றின் செயற்பாடும் பாதிக்கப்பட்டு நார்த்தன்மை அடைவதனால் (Fibrotic Change) சிரோஸிஸ் உருவாவதற்கு வழி சமைக்கிறது.

(II) ஈரலழற்சி :- ஈரலழற்சி காரணமாக ஈரல் கலங்கள் வீக்கமடையும். இதனால் ஈரல் பருமனடைவதுடன் அதன் தொழிற்பாடும் அஃதாவது மருந்துப் பொருட்களை நச்சு நீக்குதல், குருதிப்பாய புரதங்களைத் தொகுத்தல், குருதியுறைதலுக்கான புரதங்களைத் தொகுத்தல், பித்த உற்பத்தி, கிளைக்கோஜன் சேமிப்பு, கொழும்பில் கரையும் விற்றமின்களின் சேமிப்பு என்பன பாதிக்கப்படுகிறது. இதனால் மேற்கண்டவற்றின் குறைபாட்டினால் ஏற்படும் வியாதிகளும் தோன்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது.

(III) Cirrhosis :- ஏறக்குறைய 10% வீதமான மதுப்பாவனையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை. இந்நோய் அருந்தப்படும் மதுவின் தன்மையிலும் நீடிக்கும் காலத்திலும் பிறப்புரிமைக் காரணிகளிலும் தங்கியிருக்கும். இங்கு ஈரல் கலங்கள் படிப்படியாக அழிவுறுவதனாலும், செயற்படு கலங்களின் எண்ணிக்கை குறைவடைவதனாலும், கொலாஜின் படிவுற்று கலங்கள் நார்த்தன்மை அடைவதனாலும், ஈரலிற்கான குருதி விநியோகம் குறைவதனாலும், ஈரல்வாயி நாள உயர் குருதி அழுத்தமும் (Portal hypertention) அதனுடன் தொடர்புடைய வேறு அறிகுறிகளும் ஏற்படுகின்றன. ஈற்றில் ஈரல் அதிதீவிரமாகப் பாதிக்கப்படுவதனால் அமைன் அகற்றல் பாதிக்கப்பட்டு அமோனியா நச்சுத்தன்மை ஏற்படும். இது மரணத்தின் வாயிலுக்கே கொண்டு செல்லும் அபாயமும் உண்டு.

அறிகுறிகள் - களைப்பு, மண்ணீரல்வீக்கம், களநாளங்களில் இருந்து குருதிப் பெருக்கு, ஈரல் வாயிநாளக் குருதியுறை, தொற்று சுற்றயல் எடீமா.

B) சதையி அழற்சி :- வெப்பவலய நாடுகளில் மிகையான மதுப்பாவனையால் சதையிக்கலங்களில் $ca^{2+}$ படிவுறுவதனால் சதையி அழற்சி ஏற்படுகிறது.

அறிகுறி - சமிபாட்டுக் குழப்பங்கள், வாந்தி, ஓங்காளம், தொப்புள் மேற்பகுதியில் அதிகமான வலி உணரப்படுதல்.

இவற்றைத் தவிர மதுப்பாவனையாளர்களின் உணவுக்கால்வாய்த் தொகுதியில் ஏற்படக்கூடிய தீவிர பிரச்சினைகள்.

(I) களப்புற்று நோய்

(II) பெருங்குடல் புற்றுநோய்

(III) இரப்பையழற்சி

C) அனுசேபத் தாங்கங்கள் பாதிப்புறல் :-

குருதியில் யூரியாவின் அளவு அதிகரித்தல் - யூரேற்று தோல், மூட்டுக்கள் போன்ற இடங்களில் படிவுறுவதனால் மூட்டு வாதம் (Gout) ஏற்படும் அபாயம் உண்டு.

(II) குருதியில் குளுக்கோசின் அளவு குறைதல் - இதனால் அதீத மதுப்பாவனையாளர்களில் மூளையின் செயற்பாட்டிற்கு வேண்டிய குளுக்கோஸின் அளவு குறைவதனால் Coma ஏற்படும் வாய்ப்புண்டு.

(III) குருதியில் கொழுப்பமிலத்தின் அளவு அதிகரித்தல்.

### மையநரம்புத் தொகுதி பாதிப்புறல்

a) 3 - 10 வீதமானவர்களில் வலிப்பு ஏற்படுதல்.

b) நீண்டகால தொடர்ச்சியான மதுபாவனையால் மூளையில் அருட்டும் நரம்புக் கடத்திகள் (Excitatory nurotransmitor) செயற்பாடு அதிகரிக்கும் அதே வேளை எதிர்க்கும் நரம்புக்கடத்திகளின் செயற்பாடு குறைவடைவதனால் Anxiety ,Insomnia என்பன ஏற்படுகின்றது.

C) அதீத மதுப்பாவனையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை விற்றமின் $B_1$, அல்லது தயமின் குறைபாட்டினால் ஏற்படும் Encephalopathy - Wernicke Korsa Koff Syndrome அஃதாவது மூளைக்காம்பும் அதன் இணைப்புக்களும் பாதிக்கப்படுதல்.

### இதயச் சுற்றோட்டத் தொகுதி பாதிக்கப்படல்

(I) அதீத மதுப்பாவனையால் இதயத்தசை பாதிக்கப்படுகிறது.

(II) இதய அடிப்பு சத்தத்தில் மாற்றம் ஏற்படுதல் (arrythmia)

(III) உயர் குருதி அழுத்தம் ஏற்படுதல்.

### தசைத் தொகுதி பாதிக்கப்படுதல்.

குறுகிய காலத்தில் தசைக் கலங்கள் கல இறப்பிற்குள்ளாகுதல்.

### செங்குழிய உற்பத்தி பாதிக்கப்படுதல்.

Alcohol என்பு மச்சைக்கு நச்சுத் தன்மையானது என்பதனால் என்பு மச்சையில் செங்குழியங்களினதும், வெண்குழியங்களினதும், குருதிச் சிறுதட்டுகளினதும் உற்பத்தி குறைவடைகிறது. அதுமட்டுமல்லாது மதுப்பாவனையாளர்களில் Folate குறைபாடு காணப்படுவதனால் உற்பத்தியாகும். செங்குழியங்கள் வழமையான அளவிலும் பெரியனவாகக் காணப்படும் (Macro cytosis)

### என்புத் தொகுதி பாதிக்கப்படுதல்

Osteomalacia - என்பு மென்மையடைவதால் இலகுவில் வளையக் கூடியதாகவும் முறியக் கூடியதாகவும் இருத்தல்.

Osteoporosis - என்புத்திணிவு கனவளவு குறைவடைதல்.

### சுவாசத் தொகுதி பாதிக்கப்படுதல்

(I) மதுப்பாவனையாளர்கள் தொடர்ச்சியான புகைப்பிடிக்கும் பழக்கத்தையும் கொண்டிருப்பதால் சுவாசத் தொகுதிப்புற்று நோய் ஏற்படும் சந்தர்ப்பம் இவர்களில் அதிகமாகும்.

(II) நெஞ்சறைத் தொற்று ஏற்படுதல்.

### அகஞ்சுரக்கும் தொகுதிபாதிக்கப்படுதல

(I) Pseudo Cushing Syndrome

(II) குருதியில் தெசுத்தெஸ்தெரோன் (Testesterone) அளவு குறைவடைவதால் - சில பாலியல் ரீதியான பிரச்சினைகள் ஏற்படுதல்.

### மதுவிற்கு அடிமையாதலும், உளவியல் பிரச்சினைகளும்

தொடர்ச்சியான மதுவின் துஷ்பிரயோகத்தினால் சகிப்புத் தன்மையும் (Tolerance), (Adaptation) இசைவாகும் தன்மையும் ஏற்படுகிறது. இதன் காரணமாக குறித்த ஓர் விளைவைப் பெறுவதற்காக உள்ளெடுக்கப்படும் மதுபானத்தின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்படுகிறது. இதனால் மதுவிற்கு அடிமையாகும் தன்மை ஏற்படுகிறது. இது பல சமூகப் பிரச்சினைகளிற்கும், உளவியல் பிரச்சினைகளிற்கும் அடிகோலுகிறது.

"உள்ளொற்றி உள்ளூர் தகப் படுவர் எஞ்ஞான்றுப் கள்ளொற்றி கண்சாய்பவர்" (927 - அதி. 93)

என்பது வள்ளுவர் வாக்கு. அஃதாவது கள்ளைப்பருகி அறிவு மயங்குபவர்களின் கௌரவம், அந்தஸ்து, என்பன சமூக மட்டத்தில் குறைக்கப்படுவதுடன் மட்டுமல்லாது அவர்களின் தனிப்பட்ட தோற்றம், குணம், கம்பீரம் (Parsonality) என்பனவும் பாதிக்கப்படுகிறது.

### மதுவிற்கு அடிமையாதலுக்கான காரணிகள்

(I) சூழற்பின்புலம் - உதாரணமாக "தந்தை எவ்வழியோ தனயன் அவ்வழி" என்பதற்கிணங்க ஓர் குடிகாரத்தந்தை தனது மகனுக்கு வழிகாட்டியாக அமைகிறார்.

(II) உயிர் இரசாயனக் காரணிகள் - உதாரணமாக எதனோலின் அனுசேபத்துடன் தொடர்புடைய நொதியங்கள் அல்லது நரம்புக்கடத்திகளில் ஏற்படும் அசாதாரண மாற்றங்கள். இத்தகையோர் ஒரு முறை மதுவை பாவித்தால் மதுவிற்கு அடிமையாவது உறுதியாகிறது.

(III) உளவியல் ரீதியான பாதிப்புக்கள் - தாழ்வு மனப்பான்மை.

(IV) சமூகத்தில் அதிகமான அளவுகளில் மதுவின் பயன்பாடு.

(V) கலாசாரம்

### சமூகப் பிரச்சினைகள்

(I) திருமணம், மற்றும் பாலியல் ரீதியிலான பிரச்சினைகள்.

(II) குடும்பப் பிரச்சினைகள்.

(III) சிறுவர் துஷ்பிரயோகம்.

(IV) வேலை வாய்ப்புப் பிரச்சினைகள்.

(V) பண நெருக்கடி

(VI) விபத்துக்கள் - வீட்டில் அல்லது வீதியில் அல்லது வேலைபார்க்கும் இடங்களில் விபத்துக்குள்ளாதல்.

(VII) பல சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுதல், கொலைக் குற்றங்களில் ஈடுபடுதல்.

### மதுப்பாவனையாளர் எதிர்கொள்ளும் உளவியல் பிரச்சினைகள்

(I) தாழ்வுச் சிக்கல், தனிமையுணர்வு.

(II) ஞாபக சக்தியில் குழப்பம் ஏற்படுதல்.

(III) தற்கொலை முயற்சியில் ஈடுபடுதல் (விரக்தி)

(IV) Anxiety and phobias.

(V) Personality பாதிக்கப்படுதல்.

### Withdrawal Symptoms

அருந்தப்படும் மதுபானத்தின் அளவு சடுதியாகக் குறைக்கப்படும் போது அல்லது நிறுத்தப்படும் போது உடலில் சில உபாதைகள் தோன்றுதல்.

உதாரணம் :-

(I) மிகையாக வியர்த்தல்.

(II) நடுக்கம்

(III) ஓங்காளம், வாந்தியெடுத்தல்.

(IV) நெஞ்சுப்படபடப்பு

(V) உயர் குருதி அழுத்தம்

(VI) தலைவலி

(VII) சோர்வு, களைப்படைதல்.

(VIII) வலிப்பு ஏற்படுதல்.

(IX) பார்வை, கேட்டல் போன்றவற்றில் பிரமை ஏற்படுதல்.

எனவே மதுவிற்கு அடிமையானவர்கள் மதுப்பழக்கத்தில் இருந்து விடுபட விரும்பின் உடனடியாகப் பாவிக்கும் அளவை நிறுத்தவோ குறைக்கவோ கூடாது. இவர்கள் தகுந்த வைத்திய சிகிச்சை முறையை நாடுதல் அவசியம்.

**சிகிச்சைமுறைகள் :-**

(I) உளவியல் ரீதியிலான சிகிச்சை முறை.

தற்போது மதுவிற்கு அடிமையாதலினின்றும் விடுபடுவதற்கு ஏற்ற சிறந்த ஒரு சிகிச்சை முறையாக உளவியல் ரீதியிலான சிகிச்சைமுறை கையாளப்படுகிறது. இம்முறையில் மதுப்பாவனையிலிருந்து விலக விரும்புவர்களை ஊக்குவித்தல், பின்விளைவுகளைப்பற்றி அறிவுறுத்தல், ஏற்படும் தீயவிளைவுகளை எடுத்துக் கூறல் ஆகிய முறைகள் கையாளப்படுகின்றன. எனவே உண்மையில் மதுவிற்கு அடிமையாதலில் இருந்து விடுதலை பெற விரும்புபவர்கள் தகுந்த ஓர் மனோதத்துவ நிபுணரை அணுகி அவருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி முழுமனதுடன் சிகிச்சை பெறுவார்களேயானால் நிச்சியமாக அவர்களால் மதுவிலிருந்து விடுதலை பெற முடியும்.

(II) மருந்துகளைப் பயன்படுத்துதல்

வைத்திய ஆலோசனையின் படி சில மருத்துகளைப் பயன்படுத்துவதன் மூலமும் மதுவிற் கடிமையாதலில் இருந்து விடுதலை பெற முடியும்.

## விரைவில் தேர்தல் நடத்தப்படாவிட்டால்

# ஈராக்கில் அரசியல் கொந்தளிப்புகளும் வன்முறைகளும் ஏற்படும் அபாயமுண்டு

## ஷியாம் முஸ்லிம் மதத்தலைவர் எச்சரிக்கை

(பக்தாத்)

ஈராக்கிற்கான தேர்தல்கள் இன்னும் சில மாதங்களில் நடைபெறவேண்டும் என அந்நாட்டின் மூத்த ஷியா முஸ்லிம் மதத்தலைவர் கூறியுள்ளார்.

இக்காலப் பகுதிகுள் தேர்தல்கள் நடத்தப்படாவிட்டால் ஈராக்கில் அரசியல் கொந்தளிப்புகள் அதிகரித்து, வன்முறைகள வெடிக்கலாம் என அவர் எச்சரிக்கையினையும் விடுத்துள்ளார்.

ஈராக்கின் அதிகாரத்தை அந்நாட்டு மக்களிடம் ஒப்படைக்க எணணும் அமெரிக்கா தமது திட்டத்திற்கு ஈராக்கின் ஆயத்துல்லா அமைப்பின் ஆதரவை எதிர்பார்த்திருக்கிறது எனக் கூறிய அவர் ஈராக் மீதான அமெரிக்கக் கூட்டுப் படையின் தாக்குதல்கள் இடம் பெற்று ஒருவருடம் முடிவடைய இன்னும் ஒருமாதம் மட்டுமே உள்ளது. இந்தக் காலப்பகுதிக்குள் ஈராக்கில பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்றுவிட்டன. முக்கியமாக அதிபர் சதாம்ஹுசைன் கைது செய்யப்பட்ட போதிலும் இதுவரை ஈராக்கில் தேர்தல் நடத்தப்படவில்லை. இவ்வாறு தேர்தல்இடம் பெறாது ஈராக்கில் அமெரிக்க நிர்வாகம் தொடருமானால் அமெரிக்கா தேவையற்ற உயிரிழப்புக்களைச் சந்திக்க வேண்டிய நிலை தோன்றுவதுடன் ஈராக்கில் புனர்நிர்மாணப் பணிகளில் முன்னேற்றம் ஏற்பட சிக்கல்கள் தோன்றும். இவற்றைத் தவிர்ப்பதற்கு இன்னும் சில மாதங்களுக்குள் ஈராக்கில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (து-2)

உலக தரிசனம்

## கொலின் பவல் ஜப்பானில் விசேடபேட்டி

(டோக்கியோ)

வடகொரியாவின் அணுவாயுதப்பிரச்சினைக்கு இராஜதந்திரத் தீர்வொன்றே சிறந்த வழியெனவும் அதனையே அமெரிக்கா விரும்புவதாகவும் அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் கொலின் பவல் கூறியுள்ளார்.

ஜப்பான் தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் அளித்த விசேடபேட்டி ஒன்றிலேயே கொலின்பவல் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் இது விடயங்குறித்து தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ டபிள்யு புஷ் உட்பட உலகில் உள்ள சகல நாடுகளின் தலைவர்களும் யுத்தத்தை விரும்பவில்லை. எந்த நாட்டுடனும் இராஜ தந்திர ரீதியிலான உறவை வளர்ப்பதனையே விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

(து-2)

## யூதக் குடியேற்றங்களை அகற்றும்

# இஸ்ரேல் பிரதமரின் திட்டத்தை எதிர்த்து மாபெரும் ஆர்ப்பாட்டம்

(ரெல்அவிவ்)

இஸ்ரேலின் யூதக்குடியேற்றங்களை அகற்ற வழிகோலுகின்ற திட்டங்களுக்கு எதிராக பல ஆயிரக்கணக்கானோர் இஸ்ரேலில் ஆர்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இஸ்ரேலிய அமைச்சர்களும் பங்கேற்றிருந்தார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பலஸ்தினத்துடன் சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்ளும் முயற்சியின் ஒரு கட்டமாக இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் மேற்குக்கரையில் உள்ள யூதக் குடியேற்றங்கள் சிலவற்றை அகற்றும் யோசனையை அண்மையில் முன்வைத்தார். இஸ்ரேல் பிரதமரின் இந்த யோசனைத் திட்டம் இஸ்ரேலில் பல கருத்து முரண்பாடுகள் தோன்ற வித்திட்டது.

இதனை அடுத்து இஸ்ரேல் தலைநகர்ரெல் அவிவ் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் சுமார் ஒருலட்சம் பேர்வரை கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. குடியேற்றங்களை அகற்றிக் கொள்வது நாட்டை இல்லாது அழித்துவிடுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்த சுலோக அட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஏனைய சில சுலோக அட்டைகளில் இஸ்ரேலின் எல்லை வரைபடம் தமக்குக் கடவுளால் அமைக்கப்பட்ட ஒன்று என்ற வாசகங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(து-2)



சீனாவில் குவாங்டான் மாகாணத்தில் சார்ஸ் எதிர்ப்பினை சித்திரிக்கும் வகையில் அண்மையில் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. இதனை பார்வையிடச் சென்ற சிறுமி ஒருத்தி அங்கு காட்சிக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புனுகுப் பு,னைகளை ரசித்துப் பார்க்கும் காட்சி

## அல்கெய்டா குண்டு தயாரிப்பாளரை தேடும்பணியில் அமெரிக்கா தீவிரம்

(வாஷிங்டன்)

அல்கெய்டா பயங்கரவாத அமைப்பின் குண்டுத்தயாரிப்பாளரை தேடும் வேட்டையில் அமெரிக்க உளவு நிறுவனம் இறங்கியுள்ளது.

அமெரிக்காவினுள் இருந்து கொண்டே கொடூரமான குண்டு மற்றும் பயங்கரவாதத்தாக்குதல்களுக்குத் தேவையான கருவிகளை உருவாக்கும் பணியில் அவர் ஈடுபட்டுக் கொண்டிருகிறார் என்ற தகவலையடுத்து இந்நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எகிப்திய நாட்டைச் சேர்ந்தவரான முஜாப்முக்தி அபுஹபாய் எனற இந்தக் குண்டுத் தயாரிப்பாளரின் நடவடிக்கைகள், தொடர்பாக புதிய தகவல்களை கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்க பயங்கரவாத எதிர்ப்புத்துறையின் அதிகாரிகளை மேற்கோள்காட்டி நியூயோர்க் போஸ்ட் நாளேடு இதனைத் தெரிவிக்கின்றது. (து-9)

## பா.ஜ.க.வை.சாடுகிறார்

# காங்கிரஸ் தலைவி சோனியா

(புதுடில்லி)

காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி வெளிநாட்டவர் என்று அடிக்கடி கூறிவரும் பாரதிய ஜனதாக் கட்சியை சோனியகாந்தி கடுமையாக சாடியுள்ளார்.

இதுவிடயம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய சோனிய காந்தி,

பா.ஜ.க.தம்மை தேவையற்ற சர்ச்சைகளுக்குத் திசைதிருப்புவதாகவும், எனினும் தாம் மக்களின் நலனிலேயே பெரிதும் அக்கறை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே சோனியா காந்தி வெளிநாட்டவர் என்ற விடயத்தை இந்திய நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின் போது முக்கிய பிரச் சினையாக எழுப்பப் போவதாக பாரதிய ஜனதாக்கட்சி கூறியுள் ளது.

ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க.பொதுச் செயலர் பிரமோத் மகாஜன் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

உலகில் எந்த நாட்டிலும் பிற நாட்டவர் ஒருவர் உயர்பதவிவகிக்க அந்நாட்டு அரசுகள் அனுமதிப்பதில்லை. அதையேதான் இந்தியயாவும் விரும்புகிறது.

வெளிநாட்டவரான சோனியா காந்தி நாட்டை ஆள என்ன திறமைய்ய கொண்டுள்ளார்? அத்துடன் அவர் இந்தியரா என்ற கேள் விகளை தேர்தல் பிரசாரத்தின் போது எழுப்பவுள்ள தாக அவா மேலும் தெரிவித்துள்ளார்.(து-2)

## வெளிநாடுகளில் பயிற்சிபெற்ற

வெளிநாட்டவர் என்ற விடயத்தை இந்திய நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின் போது முக்கிய பிரச் சினையாக எழுப்பப் துடன் அவர் இந்தியரா என்ற கேள் விகளை தேர்தல் பிரசாரத் தின் போது எழுப்பவுள்ள தாக அவா மேலும் தெரிவித்துள்ளார்.(து-2)

# வெளிநாடுகளில் பயிற்சிபெற்ற ஆப்கானிஸ்தான் படைவீரர்கள்


# 10 ஆயிரம் பேர் தப்பியோட்டம்

(காபூல்) வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற ஆப்கானிஸ்தான் இராணுவ வீரர்கள் 10ஆயிரம்பேர் தப்பியோடி யுள்ளதாக காபூல் படைஅதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த இராணுவ வீரர்கள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பயிற்சி பெற்று முடிதத பின்னரே தப்பியோடியுள் ளதாகவும் இதனால் ஆப்கானிஸ் தான் தேசிய இராணுவ வீரர்கள் 10ஆயிரம் பேரினால் வீழ்ச்சி கண்டுள ளதாகவும் அந்த அதிகாரி கவ லைபடக் கூறியுள்ளார்.

இவர்கள் அனைவரும் எங்கு தப்பிச் சென்றுள்ளார்கள் என்ப தைக் கண்டுபிடிக்கும் நடவடிக் கையை ஆப்கானிஸ்தான் அர சாங்கம் தீவிரப்படுத்தியுள்ளதுடன பயிற்சி பெறப்பட்ட நாடுகளின் உதவியினையும் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தப்பியோடிய 10ஆயிரம் இராணுவ வீரர்களும் தலபான் தீவிரவாதக் குழக்களுடன இணைந்திருக்க கூடுமென அவ தானிகள் சந்தேகம் தெரிவித்துள் ளனர். (து-2)



**எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் பிரிட்டனின் சௌதவி ஏல நிறுவனத்தினால் ஏலம் விடப்படவுள்ள இந்த ஈஸ்ரர் முட்டை 540கோடிக்கு மேல் ஏலம் போகும் என எதிர்பார்க் கப்படுகின்றது. இந்த ஈஸ்ரர் முட்டை லண்டன் அரச குடும் பத்திற்குச் சொந்த மானது.**



**வட இந்திய மாநிலமான உத்திரப் பிரதேசத்தில் தற்போது கடும்குளிர் அங்குள்ளவர்களை வாட்டுகின்றது. அதில் இருந்து தம்மைப் பாதுகாத் துக்கொள்வதற்காக அங்குள்ள மக்கள் தமது உடைமைகளோடு அந்த மாநிலத்தை விட்டு வெளியேறுவதைப் படத்தில் காணலாம்.**

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

### போர்ச் சூழல் மாறவில்லை!

# வடக்கில் மீள் குடியமர்வு விடயத்தில் முஸ்லிம்கள் அவசரப்படக்கூடாது

## வன்னிப்புனர்வாழ்வு அமைச்சர் ஆலோசனை

(கொழும்பு)

**நாட்டில் தொடர்கின்ற இனப்பிரச்சினையை தீர்க்கும் வகையில் அரசினால் தீர்வுத்திட்டம் ஒன்று முன் வைக்கப்பட்டால் அதன் மூலம் உடனடியாக நாம் எல்லா வற்றையும் பெற்றுவிடலாம் என எதிர்பார்க்க முடியாது என வன்னிப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் நூர்தீன் மசூர், இலங்கை ஒலிபரப்புப் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் "விடியும் வேளை" நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் கூறியுள்ளார்.**

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

நீண்ட காலமாக இலங்கையில் இருந்து வரும் இனப்பிரச்சினையைத் தீர்க்குமாறு நாங்கள் மட்டுமன்றி, சர்வதேச நாடுகளும் இலங்கை அரசாங்கத்தைக் கோரி வருகின்றன.

அதற்கமைய எந்தவொரு அரசாங்கத்தினாலாவது தமிழ்-முஸ்லிம் மக்களுக்கான தீர்வுத் திட்டம் ஒன்று முன் வைக்கப்பட்டால் அதிலிருந்து நாம் எல்லா வற்றையும், அதாவது எமது கோரிக்கைகள் எல்லாம் உடனடியாக நிறைவேறும் என்பதை எதிர்பார்க்ககூடாது.

அவ்வாறான ஒரு தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் முன் வைத்து,அது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துகின்ற போது சிறுபான்மையின சமூகங்களான நாங்கள் சில விட்டுக் கொடுப்புக்களுடன் நடந்து கொள்ளவேண்டும்.

அதேசமயம், அரசாங்கமும் தமிழ் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய இரண்டு சமூகங்களிடையே ஓர் நியாயமான தீர்வைக் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும்.

### வீணான குற்றச்சாட்டு

வடக்குமாகாணத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் தம்மை மீளக்குடியமர்த்த எவரும் இது வரை நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் தமக்கு நிவாரண உதவிகளை வழங்கி ஏமாற்றுவதாகவும் குறைகூறுகின்றனர்.

இவ்விடயத்தில் அவர்கள் ஓர் உண்மை நிலையைப் புரிந்து கொள்ளவேண்டும். வடக்கே மீளக்குடியமரச் சென்ற தமிழ் மக்கள் கூட அங்கு சொந்த இடங்களில் குடியமர முடியாது அவல வாழ்க்கை வாழ்கின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அங்குள்ள மக்களின் குடியிருப்புக்கள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டிருக்கின்றன.

புனரமைப்பு பணிகள் எதுவும் முழுமையாக அங்கு மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாகக் கூறப்போனால், வடக்கில் இன்னும் இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப் படவில்லை.

இந்நிலையில்,எமது முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது.

இதற்கிடையில் வன்னி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்குடும்பங்களில் பலர் தற்போது மீளக்குடியமர்ந்து வருகின்றனர். அவர்களுக்குரிய சகல உதவிகளையும் எமது அமைச்சும் சர்வதேச தொண்டு நிறுவனங்களும் வழங்கிவருகின்றன.

இவைதவிர,தற்போதைய நிலையில் நாம் மக்களை மீளக் குடியமர்த்த முடியாதமைக்கு இன்னுமொரு காரணமுமிருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் 3முக்கிய அமைச்சுக்கள் பொறுப்பேற்கப்பட்டதைத் தொடர்ந்து, சமாதானமுயற்சிகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. சமாதான முயற்சிக்கு, அனுசரணை வழங்கி வந்த நோர்வே சமாதானக்குழுவும் சமாதான முயற்சியில் இருந்து பின்வாங்கி விட்டது.

### ஒப்பந்தம் கேள்விக் குறியானது

அதுமட்டுமன்றி, யுத்த நிறுத்த உடன்படிக்கை கூட தற்போது கேள்விக்குறிக்குள்ளாக்கப்பட்டு விட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசு சமாதான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது.

இத்தகையதொரு சூழ்நிலையில், நாம் மக்களை வடக்கில் மீளக் குடியமர்த்த முடியாது. எங்கே? எப்போது? போர் தொடங்கும்? என்ற அச்ச நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் போது இத்தகைய மீள் குடியேற்ற நடவடிக்கையை அவசரப்பட்டு மேற்கொள்ளக்கூடாது.

இதேசமயம், யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறிய முஸ்லிம் குடும்பங்கள் சிலவற்றிற்கு இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் மட்டுமே உதவிகளை வழங்கினார் என்றும் வேறு எந்தத் தொண்டு அமைப்புக்களோ, அமைச்சுக்களோ உதவிகளை வழங்கவில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக நான் மிகுந்த வேதனையடைந்தேன். வன்னி மாவட்டத்திற்கு மட்டுமன்றி வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கும் எனது பணிகளைத் தொடர அரசு அனுமதியளித்தால் நான் அங்குள்ள சகல மக்களுக்கும் எவ்வித பாகுபாடுமின்றி உதவிகளைச் செய்வேன்.

### முஸ்லிம்களுக்கும் பாதிப்பு

இதேசமயம் 20 வருட காலமாக இடம்பெற்ற யுத்தத்தினால் முஸ்லிம்கள் பாதிக்கப்படவில்லை என தமிழீழவிடுதலைப்புலிகள் கூறி வருவதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழர்களின் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் விடுதலைப்புலிகள்தான். அவர்களின் போராட்டம்தான் இன்றைய சமாதான சூழ்நிலையை உருவாக்க பிரதான காரணமாக இருந்தது என்பதை நாங்கள் மறுக்கவில்லை.

ஆனால்,அப்போராட்ட காலத்தில் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

போராட்டகாலத்தில் எமது மக்களும் இடம்பெயர்ந்தனர். அவர்களது உடைமைகளும் படையினரால் சேதமாக்கப்பட்டன.

எனவே,தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம் சமூகம் மூன்றாம் தரப்பாக பேசுவதனை நிராகரிக்கக்கூடாது.

யுத்த காலத்தில் கிட்டத்தட்ட 7 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களை மீளக் குடியமர்த்துவது பற்றியும் அவர்களின் தேவைகள், பிரச்சினைகள் பற்றியும் நாம் அரசுடன் பேசவேண்டியிருக்கின்றது.

தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற உணர்வு அவர்களுக்கு எவ்வாறு இருக்கின்றதோ அது போன்றே எமது மக்களின் உரிமைகளையும் அவர்களின் தேவைகளையும் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்ற அவா எமக்கும் இருக்கின்றது.

### உணர்வுகளை மதிக்கவேண்டும்

எனவே,தமிழீழ விடுதலைப் புலிகள் எமது உணர்வுகளை மதித்து எமது கோரிக்கைகளை ஏற்று நடக்கவேண்டும்.

இவை தவிர 3 முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி பறித்துள்ளமையினால்,தென்னிலங்கையில் பெரும் அரசியல் சர்ச்சை உருவாகியிருக்கின்றது. இதனால், போர் நிறுத்த உடன்படிக்கையும் கேள்விக் குறிக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்கிடையே வன்முறைகளைத் தோற்றிவித்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தாது மிக ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு சகல தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோர் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தையொன்றின் மூலமே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்பதால், அதுவரை தமிழ்,முஸ்லிம்மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். வன்முறைகளில் ஈடுபடக்கூடாது எனக் கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவித்துள்ளார். (உ-60,10)

## விசேட கூட்டம்

(சுதுமலை)

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுழிபுரம்,சங்கானை, அராலி, வட்டுக்கோட்டை உப அலுவலகப் பொறுப்பதிகாரிகள், வருமானமேற்

# ஜனாதிபதி -பிரதமர் கருத்து முரண்பாடு

# சிறுபான்மையினத்தவர்க்கே பெரும் பாதிப்பு

# ஜனாதிபதி -பிரதமர் கருத்து முரண்பாடு சிறுபான்மையினத்தவர்க்கே பெரும் பாதிப்பு

## அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் சாடல்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளால் சிறுபான்மையினத்தவரே பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சித்தலைவரும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஜனாதிபதியினால் 3 முக்கிய அமைச்சுக்கள் பறிக்கப்பட்டமையைத் தொடர்ந்து தென்னிலங்கையில் .பெரும் அரசியல் நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்லப்பட்ட சமாதான நடவடிக்கைகள் ஜனாதிபதியின் இத்தகைய நடவடிக்கை காரணமாக கைவிடப்பட்டுள்ளது.

இதனால் சிறுபான்மை யினத்தவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமக்கிடையே நிலவும் கருத்து முரண்பாடுகளைக் களைந்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இணைந்து செயற்படவேண்டும்.

அத்துடன், அரசியல் ஸ்திரதன்மையை ஏற்படுத்துவதற்காகவும் பொருளாதார அபிவிருத்தி யோசனைகளை , முன்னெடுத்துச் செல்வதற்காகவும்.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்கு இரு தலைவர்களும் முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதேசமயம், கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டை முடித்துக்கொண்டு தலதா மாளிகைக்குச் சென்ற அமைச்சர் தொண்டமான் மல்வத்தைப் பீடத்தின் மகா நாயக்கர் அதிசங்கைக்குரிய ரம்புக்கல விபசி தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய புத்திர கித்த தேரர் ஆகியோரையும் சந்தித்து பேசியுள்ளார்.

சமாதான நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுத்துச்செல்ல வேண்டியதன் அவசியம், அதற்கான வழிவகைகள் என்பன குறித்தும் அமைச்சர் மேற்படி சந்திதிப்பில் கலந்துரையாடியுள்ளார்.

(உ-60,10)

(சுதுமலை)

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுழிபுரம்,சங்கானை, அராலி, வட்டுக்கோட்டை உப அலுவலகப் பொறுப்பாதிகாரிகள், வருமானமேற்பார்வை அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோருக்கு வலி.மேற்கு சுகாதார நிலைமை சுகாதார தொழிலாளர் மேற்பார்வை சம்பந்தமான விசேட கூட்டமொன்று நாளை புதன் கிழமை காலை 10.00 மணிக்கு சுழிபுரம் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பிரதேச சபை செயலாளர் திருமதி ஜெயந்தா தலைமையில் நடைபெறவுள்ளது. ள(தி-252)

# அச்சுறுத்தும் எண்ணம் கொண்ட ஊழியர்களை அரசு அனுமதிக்கக்கூடாது

## தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

மேற்குலக நாடுகளின் ஆதிக்கம் நிலவிய காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட நிதிப்பிரமாணங்கள், நிறுவன விதிமுறைகள் என்பவற்றை தமது தோள்களில் சுமந்து வரும் அரசு ஊழியர்கள் இங்கு இருக்கும் வரை நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது.

இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மினிபே மாவத்தகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசுகையில்,

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை நடத்தி அரசை அச்சுறுத்தி வரும் ஊழியர்கள் இருக்கும் வரை நாட்டை முன்னேற்ற முடியாது.

நாட்டு நலன்களை கருத்தில் கொள்ளாத இவ் அரச ஊழியர்கள் அரசாங்கத்தை அச்சுறுத்திப் பிழைக்க முயலுகின்றார்கள். இதனை அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது.

அத்துடன், ஒவ்வொரு வருடத்திலும் பல்கலைக்கழக வாய்ப்பை இழக்கும் சுமார் 35 ஆயிரம் மாணவர்கள் தொடர்பாக ஆட்சியில் உள்ள எந்தவொரு அரசும் கவனம் செலுத்தவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

(உ-60,10)

## இன்று ஒரு தகவல்

### எதிரிகளுக்கு எச்சரிக்கை

இருட்டிப்போய்விட்டது. ஒரு இளம் பெண் தனியாக வெளியே போக வேண்டியுள்ளது. "ஜாக்கிரதையாகப் போய் விட்டுவா" என்று வீட்டில் இருப்பவர்கள் எச்சரிக்கின்றனர். "கவலைப்படாதீர்கள்... வாடகைக்கு ஒரு நாயை வாங்கித் துணைக்கு அழைத்துக்கொண்டு போகின்றேன்" என்று கூறினார் அந்தப் பெண். இப்படிக் கூறுவது நமக்கு வேடிக்கையாக இருக்கலாம். அமெரிக்காவில் இது சர்வ சாதாரணம்.

ஆமாம்! அமெரிக்காவில் பாதுகாப்புக்காக ராட்சத நாய்களை வளர்த்து வாடகைக்கு விடுகின்றனராம். பாதுகாப்பு வேண்டும் என்பவர்கள் இவற்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு போகலாம். அமெரிக்காவில் ஷெல்லி ரீச்சர் என்று ஒரு பெண்மணி. அவர் இதற்காகவே தனியாக ஒரு நிறுவனம் ஆரம்பித்து நடத்தி வருகின்றாராம்.

நூற்றுக்கணக்கில் நாய்கள் உண்டு அவரிடம். எல்லாம் நன்கு பழக்கப்பட்ட நாய்கள். யாருடன் போகின்றதோ அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும். எதிரிகள் வந்தால் ஒரே பாய்ச்சல் தான். கழுத்தைப் பிடித்துக் குதறி விடும். இதுவரை 17 ஆயிரம் முறை இவரது நிறுவன நாய்கள் பாதுகாப்பு வேலைக்குப் போயிருக்கின்றனவாம். ஒரு முறை கூட இவற்றை மீறி எந்த இடைஞ்சலும் நடந்ததில்லையாம்.

அமெரிக்காவில் இன்னொரு அலாரமும் விற்பனைக்கு வந்துள்ளதாம். இதை வாங்கி வாசலில் பொருத்தினால் போதும். அவ்வளவு தான். இது உடனே நாய் மாதிரி வள வள் என்று குரைக்க ஆரம்பித்து விடும். நிஜமான நாய் என்று நினைத்து திருடன் பயந்து ஓடி விடுவான்.

மனிதனிலிருந்து மனிதன் தப்பித்துக்கொள்வதற்கு இன்னும் சில சாதனங்கள் வந்திருக்கின்றன. ஷாக்கன் என ஒன்று அதிர்ச்சித் துப்பாக்கி. யாராவது எதிரிகள் வந்து விட்டால் உடனே இந்தத்துப்பாக்கியை எடுக்கவேண்டியது. எதிரியின் உடலை துப்பாக்கி முனையால் தொட்டு குமிழை அழுத்த வேண்டியது தான் விரோதி வீலென்று கத்திக்கொண்டு சுருண்டு விழுந்து விடுவான். சக்தி வாய்ந்த மின் கலத்திலிருந்து மின்சாரம் அவன் உடலுக்குள் பாய்ந்து விடும்.

பல அடுக்கு மாடிவீடுகளில் அவசரத்திற்கு உதவி தேடி வெளியே ஓட முடியாத நிலை ஏற்படலாம். எதிரிகள் அருகில் வந்து விடுவார்கள். இது போன்ற சந்தர்ப்பத்தில் எப்படித் தப்பித்துக்கொள்வது இதற்காக ஒரு நிறுவனம் ஒரு அலாரம் தயாரித்துள்ளது. இதை வாங்கி வீட்டில் பொருத்தவேண்டியது. எதிரி வந்து விட்டான் என்று தெரிந்தவுடன் இதன் குமிழை அழுத்தி விட்டு நாம் காதை மூடிக்கொள்ளவேண்டும். நம்மைத்தவிர வேறு யாராலும் அதனை நிறுத்த முடியாது. காதின் சவ்வு கிளிந்து போகுமளவு ஒலி வரும். ஒரு ஜெற் விமானம் நமது காதை உரசிக்கொண்டு போனால் எப்படி இருக்குமோ அது போல் இருக்கும் அந்த சத்தம். எதிரி நடுங்கிப்போய்விடுவானாம்.

"பதிலடிஸ்பிரே" என ஒன்று சந்தைக்கு வந்துள்ளதாம். தாக்கவரும் ஆசாமியின் முகத்திற்கு நேராக இதை அடித்து விட்டால் போதும். தாங்க முடியாத எரிச்சலில் கண் மண் தெரியாமல் ஓட ஆரம்பித்துவிடுவானாம்.

இதேபோல் இன்னொரு வகையான "ஸ்பிரே" எரிச்சலுக்குப்பதிலாக ஒரு கொடுமையான துர்நாற்றத்தை உண்டாக்குமாம். அதைத் தாங்க முடியாமல் திருடன் ஓடிப்போய்விடு

# காலத்தின் தேவை கருதி மாணவர்கள் பாடங்களை தெரிவு செய்யவேண்டும்

## யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கருத்து

(கோப்பாய்)

எமது பிரதேசத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலும்,மாணவர்கள் கற்றலை மேலும் வினைத்திறனுடையதாக்கி, தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியுடன் கூடிய கல்விக்கு வழி வகுக்க வேண்டிய பொறுப்பு பாடசாலை அதிபர்களைச் சார்ந்ததாகும். எனவே கா.பெ.த. உயர் தர வகுப்பில் விவசாயம், மனையியல் போன்ற பாடங்களைத் தெரிவு செய்து மாணவர்கள் கற்பதற்கும், தெரிவு செய்வதற்கும் வாய்ப்பளிக்க வேண்டும்.

இதன் மூலமே ஆசிரிய வளத்தை ஈடு செய்ய முடியும். இவ்வாறு யாழ். வலயப் பாடசாலை அதிபர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் மனையியல் பாடத்திற்கான யாழ். மாவட்ட கோட்டாவுக்குட்பட்ட தொகையின்மையால், வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களே தெரிவு செய்யப்பட்டு இவ் இடைவெளிகளை நிரப்பியுள்ளனர்.

ஆனால், இவர்களின் சேவை யாழ். மாவட்டத்திற்குக் கிடையாது எனவே இவ்வாறான நிகழ்வுகள் இடம் பெறாதவகையிலும் எதிர்காலத்திற்குக் கட்டியங் கூறும் வகையிலும் காலத்தின் தேவைக்குப் பொருத்தமான பாடங்களைத் தெரிவு செய்வதனை முன்னெடுப்பதன் மூலம் கல்வியின் வீண் விரயங்களை இயன்ற வரை குறைக்க முடியும்.

எதிர்காலக் கல்வியின் வாழ்வியலை ஆங்கிலக் கல்வியும் கணனிக்கல்வியுமே நிச்சயிக்கவுள்ளன எனவே இன்றைய நிலையில் இவற்றை மெருகூட்ட வேண்டும். இதற்கான வளப்பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை என்பன நிலவிய போதும், இதற்காக திணைக்கள ரீதியாகவும் பல்கலைக்கழக ரீதியாகவும் வழங்கப்படும். பயிற்சிகளைத் தட்டிக் கழிக்காமல் பொருத்தமான ஆசிரியர்கள் கலந்து கொள்வது அவசியமானதே.

இவ்வருடத்தில் பாடசாலை நாட்களை வீணடிக்காத வகையில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் நடை பெறக்கூடியவாறு இவ்வருடச் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றார்.

(தி-79)

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை புலிகள் மீறியுள்ளனர்

## க.கா.குழு பேச்சாளர் குற்றச்சாட்டு

(லண்டன்)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் இருவரை கடந்த 5ஆம் திகதி திருகோணமலையில் விடுதலைப்புலிகள் தடுத்து வைத்ததாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு குற்றம் சாட்டியுள்ளது.

இச் சம்பவம் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரிகரொட்டி லண்டன் பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியின் முழு விபரமும் வருமாறு,

**கேள்வி:- சம்பவம் தொடர்பாக என்ன நடந்தது என்று விளக்குவீர்களா?**

பதில்:- திருகோணமலையின் தென்பகுதியில் எமது கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் வழக்கமாக ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அங்கிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தபொழுது விடுதலைப் புலிகளால் அவர்கள் 3 மணி நேரம் அங்கு தடுத்து வைக்கப்பட்டார்கள். பின்னர், அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். இவர்கள் விடுவிக்கப்பட்டதற்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் ஏதோவொரு சம்பந்தம் இருக்கவேண்டும் என நான் கருதுகின்றேன். அது தொடர்பாக சரியான தகவல் எமக்குக் கிடைக்கவில்லை.

விடுவிக்கப்பட்ட பின்னர் எமது கண்காணிப்பாளர்கள் எம்மிடம் வந்து சேர்ந்துள்ளார்கள். அதன் பின்னர் நாம் இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம். இச்சம்பவம் தொடர்பாக திருகோணமலையின் புலிகளின் தளபதி பதுமனுடனும் எமது திருகோணமலை கண்காணிப்புக்குழுவினர் பேசியுள்ளனர்.

அத்துடன், எமது பிரதித்தலைவர் ஹொக்கிலண்ட் சம்பவம் பற்றி முழுமையான விளக்கம் தருமாறு கேட்டு தமிழ்ச்செல்வனுக்குக் கடிதம் அனுப்பியுள்

## இராசி பலன்

**13 .01. 2004**

**(மார்கழி 29, செவ்வாய்க்கிழமை)**

| | | |
|---|---|---|
| சஷ்டி | முன்னிரவு | 09.58 வரை |
| உத்தரம் | முன்னிரவு | 08.25 வரை |
| இராகுகாலம் | | 03.33-5.03 மணிவரை |
| சுபநேரம் | | 11.03-12.33 மணிவரை |

அமிர்த சித்தம்

**மேடம்**

ஜனவசியம், காரிய சித்தி, தொழில் நன்மை, தேக ஆரோக்கியம்.

**இடபம்**

வியாபார நன்மை, எடுத்தகாரியம் தாமதமாகும், உடல்நலக் குறைவு, பணக்குறைவு

**மிதுனம்**

மனச்சஞ்சலம், குடும்பக் கவலை, காரிய தாமதம், பிரயாணம்.

**கடகம்**

இதேபோல் இன்னொரு வகையான "ஸ்பிரே" எரிச்சலுக் குப்பதிலாக ஒரு கொடுமையான துர்நாற்றத்தை உண்டாக் குமாம். அதைத் தாங்க முடியாமல் திருடன் ஓடிப்போய்விடு வானாம். சில சமயம் அந்தத் துர்நாற்றம் தாங்க முடியாமல் திருடன் மயங்கியே விழுந்து விடுவானாம். அப்படி ஒரு கொடுமையான நாற்றம். என்ன செய்வது காலம் போகின்ற போக்கில் இப்படியான கருவிகளை வைத்துக்கொண்டு தான் மனிதர்கள் மத்தியில் காலம் தள்ள வேண்டியுள்ளது.

ஒரு வீட்டில் இப்படித்தான் ஒரு "பதிலடிஸ்பிரே" துர்நாற் றம் தாங்க முடியாமல் ஒரு ஆள் மயங்கிக் கிடந்தானாம் உடனே பொலிஸ்காரர்கள் ஓடி வந்து அவனைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி "நட பொலிஸ் நிலையத்திற்கு" என்று கூறி னர். "சார்... ஸ்பிரேயரில் எது முன்பக்கம் என்று தெரியாமல் அடித்து விட்டேன் நான் திருடன் இல்லை. வீட்டுக் காரன்" என்றானாம் அந்த ஆள்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# பட்டிப்பொங்கல் விழாவும் பசுக்களின் ஊர்வலமும்

(யாழ்ப்பாணம்)

பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணைய ஏற் பாட்டில் எதிர்வரும் 16ஆம்திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2மணிக்கு யாழ். நகர் சந்தி ஞான வைரவர் ஆலயத்தில் பட்டிப்பொங்கல் விழாவும் பசுக்களின் ஊர்வல மும் இடம்பெறவுள்ளது.

பசுப் பாதுகாப்பு இணைய உப தலைவர் பண்டிதர் வ. பேரின்ப நாயகம் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பட்டிப் பொங்கல், கோபூசை, பசுக்களின் பவனி, கோதனத்திருமுறை ஓதல், பிரசுரவெளியீடு, சொற்பொழி வுகள் ஆகியன இடம்பெறவுள் ளன.

அத்துடன் சமயப் பெரியார் கள் பலர் பங்கேற்று ஆசியுரை கள்,சிறப்புரைகளையும் அன் றைய தினம் நிகழ்த்தவுள்ளனர்.

(உ)

**மிதுனம்**

மனச்சஞ்சலம், குடும்பக் கவலை, காரிய தாமதம், பிரயாணம்.

**கடகம்**

உறவினர் உதவி, அதிகாரம், பிரயாண நன்மை, முயற்சி கைகூடும்.

**சிங்கம்**

அதிக வார்த்தை, வீண் செலவு, முயற்சி தாமதம், தொழில் கஷ்டம்.

**கன்னி**

சயன சுகம், போசன நன்மை, கௌரவமான நிலை, காரிய அனுகூலம்.

**துலாம்**

பிரயாண அலைச்சல், சுப செலவு, தொழில் முன்னேற்றம், பெரியோர் ஆதரவு.

**விருச்சிகம்**

இஷ்ட சித்தி, போசன நன்மை, பெருமையான சம்பவம், வருமானம் அதிகரிக்கும்.

**தனுசு**

தொழில் நன்மை, நல்ல செய்தி, அதிக பிரயாசை, அதிகாரம்.

**மகரம்**

பித்த ரோகம், காரிய தாமதம், கட்டுப்பாடு, தன விரயம்.

**கும்பம்**

எதிர்பாராத மனஸ்தாபம், காரிய தாமதம், திடீர் நன்மை, பிறருக்கு உதவுதல்.

**மீனம்**

சௌக்கிய விருத்தி, தொழில் வருமானம், கல்வியில் ஆர்வம், புதிய முயற்சி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

திருகோணமலை கண்காணிப்புக்குழுவினர் பேசியுள் ளனர்.

அத்துடன், எமது பிரதித்தலைவர் ஹொக்கிலன்ட் சம்பவம் பற்றி முழுமையான விளக்கம் தருமாறு கேட்டு தமிழ்ச்செல்வனுக்குக் கடிதம் அனுப்பியுள் ளார் எனினும், பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இதனால் நாம் இச் சம்பவத்தை ஒரு போர் நிறுத்த ஒப்பந்த மீறலாகவே கருதுகின்றோம்.

**கேள்வி:- புலிகளின் பதிலுக்காக இன்னும் எத்தனை நாட்கள் காத்திருக்கப்போகின்றீர்கள்?**

பதில்: நாங்கள் இதனை ஒரு போர்நிறுத்த ஒப்பந்த மீறல் நடவடிக்கை என ஏற்கனவே தீர்மானித்துள் ளோம். எனினும் உண்மையில் என்ன நடந்தது. ஏன் நடந்தது என்பதை புலிகள் கூறும் வரை காத்துக்கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:- கண்காணிப்பாளர்களைத் தடுத்து வைத் திருந்தவர்களின் அடையாளங்களை நீங்கள் கண்டு பிடித்தீர்களா?**

பதில்:- இல்லை. இளம்வயது விடுதலைப்புலிப் போராளிகளின் குழுவொன்று தான் இவ்வாறு நடந்து கொண்டது.

**கேள்வி:- இது தொடர்பிலான பதுமனுடனான சந் திப்பில் என்ன நடந்தது. அவர் என்ன விளக்க மளித்தார்?**

பதில்:- சந்திப்பின் போது நடந்த எவ்விதமான பேச சுக்களின் விபரங்களையும் நாங்கள் வழங்கப் போவதில்லை. எனினும், அவர்கள் தடுத்து வைத் தமை குறித்து எவ்வித விளக்கமும் இதுவரை இல்லை. (ச)

# நெல்லியடியில் டெங்கு ஒழிப்பு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப்பிரதேச சபை, சுகாதாரத் திணைக் களத்துடன் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக் கையில் ஈடுபட்டுள்ளது.

இதன் பிரகாரம் ,நெல்லியடிப்பகுதியில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் இனங்காணப்பட்டு அழிக் கப்பட்டதுடன், இது குறித்த விழிப்புணர்வு நடவடிக் கைளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-8)

தொழுகை யுள்ளும் படை யொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைந்து -குறள்

வலம்புரி

## இனத்தைக் காக்கும் பணியில் பிரதமரும் ஜனாதிபதியும்

தென்னிலங்கை அரசியலில் ஜனாதிபதியும், பிரதமரும் அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுள்ளதாக ஒரு மாயத் தோற்றம் ஏற்பட்டுள்ளது.

இருவரும் தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டதால் சமாதான முயற்சிகள் தேக்க நிலையடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் இவை யாவுமே வெறும் அரசியல் நடிப்பு. ஜனாதிபதியும், பிரதமரும் முரண்பட்டு நிற்பது தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்திலேயன்றி சிங்களஇனம்-பௌத்த மதம் என்ற நிலையில் இருவரும் மிக நெருக்கமான- இணக்கமான முடிபுகளை எடுத்து வருகின்றனர்.

தமிழர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதில் காலம் கடத்தும் பிரதமரும், ஜனாதிபதியும் நாட்டின் அரசியல் மற்றும் மத விடயங்களில் ஒன்று சேர்ந்து ஏகமனதான முடிபுகளை எடுத்துள்ள பல்வேறு நிகழ்வுகள் நடந்துள்ளன.

குறிப்பாக ஜனாதிபதியால் பறிமுதல் செய்யப்பட்ட பாதுகாப்பு-உட்துறை-ஊடகத்துறை ஆகிய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு முதல் பௌத்தத்தில் இருந்து மதம் மாற்றுவதைத் தடுப்பது வரை இரு தலைவர்களும் இணைந்தே செயற்படுகின்றனர்.

இதற்கு மேலாக மாகாண சபைத் தேர்தலிலும், பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியும், ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளன.

மாகாண சபைகளுக்கான உறுப்பினர்களை அதிகரிக்க வேண்டுமென்ற ஏனைய அரசியல் கட்சிகளின் கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் கூட்டாக எதிர்த்துள்ளனர்.

அதேவேளை, மாகாண சபைகளில் தேசிய ஆட்சி முறையென்ற ஒரு புதிய திட்டத்தையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முன்வைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், பொது ஜன ஐக்கிய முன்னணயும் இந்த நாட்டின் இரு பிரதான கட்சிகள் என்ற அடிப்படையில் அந்த இரண்டு கட்சிகளில் எந்தக் கட்சி தோற்றாலும் அஃது தமிழர்களுக்குச் சாதகமாகிவிடும் என்ற நோக்கிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மாகாண சபைகளில் தேசிய ஆட்சி முறையை அறிமுகப்படுத்தத் துடிக்கின்றார்.

அவரின் புதிய திட்டத்தில் மாகாண சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி ஆகிய இரண்டு கட்சிகளும் போட்டியிட்டு இதில் எந்தக் கட்சி தோற்றாலும், அக் கட்சியைச் சேர்ந்த இருவருக்கு அமைச்சர் பதவியை வழங்குவதென்ற அம்சம் முன்மொழியப்பட்டுள்ளது.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தேசிய அரசாங்கத்தை அமைக்க முன்வருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுத்த அழைப்பை நிராகரித்த பிரதமர், அத்தகையதொரு

# ஜே.வி.பி. - ஸ்ரீ.சு.க. கூட்டு பொ.ஐ.மு. பிளவுறும் இக்கட்டு

(மாத்தறை)

ஜே.வி.பியுடன் கூட்டமைப்பை உருவாக்குவதில் தோன்றியுள்ள சர்ச்சைகளால் பொதுஜன ஐக்கிய முன்னணி இரண்டாகப் பிளவுபடும் அபாய நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது ஆட்சி அமைத்துள்ள ரணில் அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்கத்தில், இக்கூட்டமைப்பை உருவாக்க பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கடசிகளுள் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர போன்றோர் இதற்காக பெரும் ஆர்வத்துடன் செயற்ப்பட்டு வந்தாலும். கட்சி உறுப்பினர்கள் வேறு பலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இதனால் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாக பொது ஜன ஐக்கிய முன்னணி பிளவுபடக் கூடியநிலை தோன்றியுள்ளதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-4)

### மீண்டும் பதவிப் பிரமாணம் செய்யுமாறு

# தொடர்பாடல், கிறிஸ்தவ விவகார அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

மக்கள் தொடர்பாடல் மற்றும் கிறிஸ்தவ விவகார அலுவல்கள் ஆகிய இரு அமைச்சுக்களையும் தற்பொழுது பொறுப்பில் வைத்திருக்கும் இரு அமைச்சர்களையும் மீண்டும் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மக்கள் தொடர்பாடல் மற்றும் ஊடகத்தறைக்கு அமைச்சராக இம்தியாஸ் பாக்கீர்மாக்காரும், உள்துறை மற்றும் கிறிஸ்தவ வி[illegible]கார அலுவல்கள் அமைச்சராக ஜோன் அமரதுங்கவும் இருந்து வந்த நிலையில், கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை ஆகிய அமைச்சுக்களை பொறுப் பேற்றிருந்தார்.

இதனால், மேற்படி இரு அமைச்சர்களிடமும் இருந்து பொறுப்பேற்கப்பட்ட உள்துறை, ஊடகத்துறை அமைச்சுக்கள் தவிர தற்பொழுது இம்தியாஸ் பாக்கீர்மாக்காரின் பொறுப்பில் மக்கள் தொடர்பாடல் அமைச்சும் ஜோன் அமரதுங்கவின் பொறுப்பில் கிறிஸ்தவ விவகார அலுவல்கள் அமைச்சும் உள்ளன.

இந்த நிலையில், இவ் இருவரும் தம் வசம் தற்பொழுது உள்ள அமைச்சுக்களுக்காக மீண்டும் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இத பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு உத்தியோகபூர்வமாக பணிப்புரைக் கடிதம் ஒன்றை ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (உ-4)

### பாதாள உலகக் கோஷ்டி வழக்கு விசாரணைகள்

## வெலிக்கடைச் சிறைச்சாலையில்

(கொழும்பு)

பாதாள உலகக் கோஷ்டியினர் சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணைகளை வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள்ளேயே நடத்துவது குறித்து ஆராயப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் புறாமி மர்சூத் பிரதம நீதியரசருடனும் பிரதான மஜிஸ்ரேட் உடனும் கலந்துரையாடவுள்ளார்.

வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லப்படும் சந்தேக நபர்களும் சாட்சியாளர்களும் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

இவர்களைப் பாதுகாக்கவேண்டியது சிறைச்சாலைத் திணைக்களத்தின் கடமை ஆகும். இதனடிப்படையிலேயே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர் தம்மிக்க அமரசிங்கவை கொலை செய்தவர், சட்டமாணவரைப் போன்று வேடம் தரித்து நீதிமன்ற வளாகத்தில் புகுந்தே கொலை செய்தார்.

இதனால் சட்டத்தரணிகளுடன் எதிர்காலத்தில் பேச்சு

### 2வது நாளாக இன்றும்

## கேணல் கிட்டு நினைவாக கோட்ட ரீதியாக சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கேணல் கிட்டுவின் நினைவு தினத்தையொட்டி யாழ். மாவட்டத்தில் உள்ள வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகக் கோட்டங்களில் நேற்றைய தினம்சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பிரகாரம் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் இச் சிரமதானப் பணி இடம்பெற்றது.

யாழ்.நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் அனுசரணையுடன் இடம்பெற்ற இச்சிரமதானப் பணிகளில் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சர்வோதயம், யாழ்.மாநகரசபை ஊழியர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபை ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

நேற்று ஆரம்பமான இப்பணி இன்றும் நடைபெறவுள்ளதாக தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார். (உ-7)

### கடந்த ஐந்து வருடத்தில்

## 500 பாடசாலைகளுக்கு மூடுவிழா

(கொழும்பு)

கடந்த 5 வருட காலத்தில் 500க்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

மாகாணசபைகளின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் எந்தவொரு பாடசாலைகளையும் மூடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என கல்வி அமைச்சின் செயலாளர் வி.கே. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஆனால், பாடசாலைகள் மூடப்படுவது தொடர்பாக கல்வி அமைச்சின் மீது குற்றங்கள் சுமத்தப்படுகின்றன.

இவை அனைத்தும் ஆதாரம் அற்றவையே,

மாணவர்கள் பிரபல பாடசாலைகளை நோக்கிச் செல்வ

தென்ற அம்சம் முன்மொழியப்பட்டுள்ளது.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தேசிய அரசாங்கத்தை அமைக்க முன்வருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுத்த அழைப்பை நிராகரித்த பிரதமர், அத்தகையதொரு தேசிய அரசை அமைக்க வேண்டிய தேவைப்பாடு இல்லையெனக் காரணம் காட்டியிருந்தார்.

ஆனால் இப்போது அதேபிரதமர் மாகாண சபைகளில் தேசிய ஆட்சி முறையை அமுல் படுத்த முற் டுகிறார் எனில் அவரின் அனைத்துச் செயற்பாடுகளும் சிங்கள-பௌத்த தேசம் என்ற அடிப்படையில் நகர்த்தப்படுவதை உறுதிப்படுத்த முடியும்.

மாகாண சபைகளில் இரு பிரதான கட்சிகளின் ஆட்சி முறையை ஏற்படுத்தி அதன் வழியாக, சிங்களவர்கள் சிங்களவர்களை எதிர்த்து நிற்கின்ற முறைமைக்கு முடிபு கட்டுவதே பிரதமர் ரணிலின் பிரதான நோக்கமாகும்.

இதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சிங்களத் தலைமைகளின் அதிகாரத்தைப் பலப்படுத்தவும் அதன்ஊடாக தமிழர்களின் பலத்தை நசுக்கவும் பிரதமர் முற்பட்டுள்ளார்.

சமாதான முயற்சிகள் தடைப்படுவதற்குப் பிரதமர் காரணமென ஜனாதிபதியும், ஜனாதிபதியே காரணமென பிரதமரும் மாறி மாறி குற்றஞ்சாட்டினாலும் இக்குற்றச்சாட்டுக்குள்ளும் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்கள் என்பதால் இருவரின் குற்றச்சாட்டுக்கள் கூட அவர்களைப் பொறுத்தவரை மகிழ்வுக்குரியதே.

எதுவாயினும் காலத்திற்குக் காலம் தமிழ் மக்களை ஏமாற்றும் சிங்களத் தலைமைகள் குறித்து தமிழர்கள் விழிப்பாக இருப்பது தொடர்ந்தும் ஏமாற்றப்படாமல் இருப்பதற்கான வழியாகும்.

அண்மையில் பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர் தம்மிக்க அமரசிங்கவை கொலை செய்தவர், சட்டமாணவரைப் போன்று வேடம் தரித்து நீதிமன்ற வளாகத்தில் புகுந்தே கொலை செய்தார்.

இதனால் சட்டத்தரணிகளுடன் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடாத்தி அவர்களை சோதனை நடத்துவதற்கான அனுமதி கோரப்படவுள்ளது.

மேலும் நீதிமன்றங்களின் வளாகங்களுக்குள் செல்லும் உத்தியோகத்தர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்குவது குறித்தும் ஆராயப்படவுள்ளன. (தி)

## திணசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

போராட்டங்களையும் தவறுகளையும் பொருட்படுத்தாதே. பசு ஒன்று பொய் பேசியதாக நான் எந்தக் காலத்திலும் கேள்விப்பட்டதில்லை. ஆனால் அது பசுவே தவிர ஒரு போதும் மனிதனாகிவிடாது. எனவே இந்தத் தோல்விகளையும் இத்தகைய ஒழுக்கக் கேடுகளையும் ஒரு போதும் பொருட்படுத்தாதே. ஓராயிடம் முறை நீ உனது இலட்சியத்தைக் கைக்கொள். ஆயிரம் முறை நீ தோல்வியுற்றாலும் மீண்டும் ஒருமுறை கைக்கொள்ள முயற்சி செய்.

பலவீனத்திற்கான பரிகாரம், ஓயாது பலவீனத்தைக் குறித்துச் சிந்திப்பதல்ல. மறாக வலிமையைக் குறித்துச் சிந்திப்பதுதான் மக்களுக்கு, ஏற்கனவே அவர்களுக்குள் இருந்து வரும் வலிமையைப் பற்றிப் போதிப்பாயாக.

**சுவாமி விவேகானந்தர்**

நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஆனால், பாடசாலைகள் மூடப்படுவது தொடர்பாக கல்வி அமைச்சின் மீது குற்றங்கள் சுமத்தப்படுகின்றன.

இவை அனைத்தும் ஆதாரம் அற்றவையே,

மாணவர்கள் பிரபல பாடசாலைகளை நோக்கிச் செல்வதனால் கிராமப் புறப்படசாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (தி)

# மன்னார் மாவட்டத்தில் டெங்கு அபாயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சல் நோயின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் மக்கள் அனைவரையும் முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுமாறு மாவட்ட அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் அறிவுறுத்தியுள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுகாதார நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் டெங்கு காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை சுகாதார அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (தி-4)

## கட்டுத்துவக்கு வெடித்து இளைஞன் பலி

(மருதங்கேணி)

கட்டுத்துவக்கு வெடித்ததில் இளைஞன் ஒருவர் பலியானார்.

மேற்படி சம்பவம் கடந்த வெள்ளியன்று புளியங்குளப் பகுதியில் இடம்பெற்றது.

காட்டில் வேட்டையாடச் சென்றபொழுது அங்கு ஏற்கனவே கட்டப்பட்டிருந்த கட்டுத்துவக்கில் எதிர்பாராத விதமாக அகப்பட்டபோது அது வெடித்ததன் விளைவாகவே மேற்படி இளைஞன் பலியானார்.

புளியங்குளத்தைச் சேர்ந்த சி.சிவநாதன் (வயது 32) என்பவரே மேற்படி சம்பவத்தில் பலியானவராவார். (உ-35)

# தமிழ் மொழிமூல ஆசிரியர் பதவிக்கு மீள் விண்ணப்பம் கோரப்படவில்லை

## விண்ணப்பதாரிகள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் தமிழ் மொழிமூல ஆசிரியர்களை நியமிப்பதற்காக கோரப்பட்ட விண்ணப்பத்தில் பல்வேறு துறை சார்ந்த மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இது விடயம் பற்றி கல்வி அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்ட போதிலும் உரிய நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

ஏனைய துறைகள் சார்ந்த மாணவர்களையும் உள்ளீர்க்கும் வகையில் விண்ணப்பம் திருத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை இது குறித்த அறிவிப்பு வெளியாகவில்லை.

மேலும் 10துறைகளுக்கு தமிழ் மொழி மூல ஆசிரியர்களை நியமிப்பதற்கு விண்ணப்பம் கோருமாறு பணிக்கப்பட்ட போதும், நான்கு துறைகளுக்கு மாத்திரமே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியிருந்தது.

எனவே இது விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென விண்ணப்பதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த)

# சமாதான முயற்சிகள் தொடரும் என்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டு

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

சிறந்த பொருளாதரம் ஒன்று இருக்க வேண்டுமானால் அரசியலில் ஸ்திரமான சூழ்நிலை ஒன்று இருக்க வேண்டுமென காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டால், நாட்டின் வர்த்தக நடவடிக்கைகளும் பாதிப்படையும்.

இந்த நிலையைத் தடுப்பதற்கு வர்த்தக சமூகம் அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்போது தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் திருப்பங்கள் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அது என்றோ ஒருநாள் எந்த அரசாங்கத்தினாலும் ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கை மக்களுக்கும், அரசுக்கும் உண்டு.

ஆனால் வர்த்தக நடவடிக்கைகளில் வீழ்ச்சி ஏற்பட்டால் அதனை கட்டியெழுப்புவது கடினமான காரியமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

### புலிப் பெண்...

அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டார்கள் என்ற உண்மையையும் அவருக்கு நாம் எடுத்துக் கூறினோம். இதனை ஏற்றுக் கொண்ட கண்காணிப்புக் குழுவினர் தவறுக்கு மன்னிப்புக் கோரினர்.

இதனை அடுத்து இவ் விடயம் தொடர்பாக நோர்வேத் தூதுவருக்கும், எமது மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமனுக்குமிடையில் கடந்த 8ம்திகதி சந்திப்பு நடைபெற்றது. அதன் போது இது போன்ற சம்பவங்கள் மேலும் தொடர்ந்து இடம்பெறாதிருக்க வேண்டுமென கோரிக்கை விடப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

### சுவீடன்...

முயற்சிகள் குறித்து அறிந்து கொள்வதே எமது இலங்கை விஜயத்தினதும், வன்னி விஜயத்தினத்தும் முக்கிய நோக்கமாகும்.

சமாதான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுத்தல், தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக திட்ட வரைபு, சமஷ்டி அமைப்பு பற்றிய விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு, கடந்த காலப் பேச்சுக்களின் போது உருவாக்கப்பட்ட சிறான் அமைப்பின் வடக்குக் கிழக்கு புனர்வாழ்வு வேலைகள் தொடர்பாகவும் இச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவித்தனர். (ம)

### அரைக்கும்...

பட்டார்.

இதன்போது படுகாயமடைந்த அவரை வாகன வசதி எதுவும் அற்ற நிலையில் உழவு இயந்திரத்தின் மூலம் மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் இறந்துள்ளார்.

இதேவேளை சம்பவம் இடம் பெற்ற இடத்திலிருந்து அரை கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அம்பன் மத்திய மருந்தகம் இன்னும் இயங்காத நிலையில் 7கிலோமீற்றர் தூரத்திலுள்ள மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-43,35)

### காரணம்...

மக்களின் இவ் அரும்பெரும் சொத்தை எப்படியும் அழிக்க வேண்டும் என்ற கடின எண்ணப் போக்கையே வெளிக்காட்டியது.

அரசியல் போட்டி காரணமாக இந்நூலகம் திரும்பவும் பழைய நிலைக்குத் திருத்தி அமைக்கப்பட்டமையும் விசாரணைக் குழுவின் சிபார்சில் நஷ்ட ஈட்டுப் பணம் வழங்கத் தீர்ப்பளிக்கப்பட்டமையும் தமிழ் மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

இருப்பினும் புனருத்தாரணம் செய்யப்பட்ட இந்நூலகம் தனிப்


## பதவி வெற்றிடம்

**பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

★கணனி பக்க அமைப்பாளர்கள்–இருபாலாரும்
(பகல், இரவுக் கடமை)

★அலுவலகச் செய்தியாளர்கள்–இருபாலாரும்
(பகல், இரவுக் கடமை)

★ஒப்புநோக்குநர்கள்–இருபாலாரும்


# சிற்றூர்திச் சேவை இன்று வழமைபோல் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இன்று வழமைபோல் சிற்றூர்திச் சேவைகள் இடம்பெறும் என்று யாழ். மாவட்ட சிற்றூர்திச் சங்கங்களின் இணையத் தலைவர் பொ.கெங்காதரன் அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள வற்வரியை நீக்குமாறு கோரி அகில இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேலை நிறுத்தப்போராட்டத்திற்கு ஆதரவாக இன்று யாழ்.குடாநாட்டு சிற்றூர்திச் சங்கங்களின் இணையமும் வேலை நிறுத்தத்தில் குதிக்கவிருந்தது.

எனினும், மேற்படி கோரிக்கை தொடர்பில் நிதி அமைச்சுப் பிரதிநிதிகளுக்கும் அகில இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் ஏற்பட்ட இணக்கப்பாட்டையடுத்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது. (உ-ச)

## கேணல் கிட்டுவின் 11-ம் ஆண்டு நினைவு

(பொன்னாலை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு உட்பட 10மாவீரர்களின் 11-ம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் எதிர்வரும் 16ம் திகதி தீருவில் சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் நாடகங்கள், கேணல் கிட்டு மாமா வில்லிசைக் குழுவினரின் வில்லிசை, தமிழீழ இசைக் குழுவினரின் எழுச்சி கீதங்கள் உட்பட பல கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந் நினைவு நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்களுக்கு பிரதேச அரசியல் துறையினரால் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளது. (ச-49)

### அழைப்பை...

தவறு. தொழில்நுட்ப கோளாறுகளாலும் 10 எண் கொண்டதாக இலக்கங்கள் மாற்றப்பட்டதாலுமே ஏற்பட்டது.

உள்வரும் அழைப்புக்கள் முற்றிலும் இலவசம் என்ற தவறான கருத்து பொதுமக்களிடையே நிலவுகிறது. உண்மையில் அழைப்பை ஏற்படுத்துபவரே மேலதிக பணம் செலுத்த வேண்டியிருக்கும் என்றார். உள்ளூர் தொலைபேசி சேவை வழங்குநர்களுடன் பொதுமக்களுக்கு நன்மை தரும் வகையில் இதனை எவ்வாறு நடத்தலாம் என்பது பற்றி கலந்துரையாடப்பட்டு வருகிறது. இதுபற்றி விரைவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் என்றும் அவர் கூறினார். (ந-6)

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கான தொலைக்கல்வி வகுப்புக்கள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இன்று நடைபெறமாட்டாது என யாழ் மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா அறிவித்துள்ளார்.

இவ் வகுப்புக்கள் எதிர்வரும் 16ந் திகதி குறிப்பிட்ட ஒழுங்கில் நடைபெறுமென அவர் தெரிவித்துள்ளார். (ச-3)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும், ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப.11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் ஊழியர் சங்கத்தினரின் கோரிக்கைகள் குறித்தும், அவற்றை நிறைவேற்றுவது குறித்தும் ஆராயப்படவுள்ளது.

எதிர்வரும் 22ந் திகதிக்கு முன்னர் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதவிடத்து மீண்டும் போராட்டத்தில் குதிக்கப்போவதாக ஊழியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(த-7)

## “நினைவுள் மீள்தல்”

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் “நினைவுள் மீள்தல்” வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக நூலகக் கேட்போர் கூடத்தில் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ப.பகீரதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வெளியீட்டுரையை எழுத்தாளர் அ.யேசுராசாவும், மதிப்பீட்டுரையினை தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரனும் நிகழ்த்தவுள்ளனர். (உ-8)

## பட்டமளிப்பு மார்ச்சில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா எதிர்வரும் மார்ச் மாதம் 27ம் திகதி நடைபெறவுள்ளது.

இப் பட்டமளிப்பு விழா ஜனவரி மாதம் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

(பகல், இரவுக் கடமை)

★அலுவலகச் செய்தியாளர்கள்–இருபாலாரும்
(பகல், இரவுக் கடமை)

★ஒப்புநோக்குநர்கள்–இருபாலாரும்
(பகல்,இரவுக் கடமை)

★கணக்குப் பதியுநர்கள்–பெண்கள் மட்டும்
(க.பொ.த.உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் சித்தி)

★இயந்திர இயக்குநர்கள்–பயிலுநர்
(ஆண்கள் மட்டும்)

★பாதுகாப்பு ஊழியர்கள்
(ஆண்கள் மட்டும்)

**கல்வித்தகைமைகள்**

இயந்திர இயக்குநர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கு க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**

20 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

**குறிப்பு:–** விண்ணப்பதாரர்கள் யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்துக்குள் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவர்களாக இருப்பது அவசியம்.

விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பிக்கும் பதவிகளைக் குறிப்பிட்டு முழுப்பெயர், நிரந்தர, தற்காலிக முகவரி, பிறந்த திகதி, பால், விவாக நிலை, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமை, பிற தகைமை என்பவற்றை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்களுடன், 13.01.2004 இன்று பி.ப 3.00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் வகையில் வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

**✳இரவுக் கடமைக்கு ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.**

**வலம்புரி- சங்குநாதம்** **நிர்வாக உத்தியோகத்தர்**
15,வெள்ளாந்தெரு
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

பிரசாதமாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

இருப்பினும் புனருத்தாரணம் செய்யப்பட்ட இந்நூலகம் தனிப்பட்ட நலனையும் அரசியல் லாபத்தையும் கருதி தேவையற்ற சாக்குப் போக்குகளை கூறி இன்னும் திறக்கப்படாமல் இருப்பது வேதனை தருவதாக இருக்கிறது. இழந்து போன இச்சொத்து எதோ ஒரு வகையில் திரும்பவும் எமது கைக்குள் வந்துள்ள நிலையில் அதனைத் திறந்து பொதுமக்களின் பாவனைக்கு விடாதவாறு காலம் கடத்துவது சரியானதல்ல. தமிழ் மக்களின் பாரம்பரிய சொத்தான கல்வியை வளப்படுத்த-பொது அறிவினை வளர்க்க-மேற்படிப்புக்கான ஆய்வுகளை மேற்கொள்ள-உசாத்துணை நூல்களைப் பெற்றுக்கொள்ள என பல நலன்களை தமிழ் மக்கள் பெறத்தக்க விதமாக உடனடியாக இந்நூலகத்தை திறந்து வைக்கும்படி சம்மந்தப்பட்ட அனைவருக்கும் அவசர வேண்டுகோள் விடுக்கிறோம்.

சம்பிரதாய விழாக்களும் கோலாகல திறப்பு நிகழ்வுகளும் பல நீண்ட துயர அனுபவங்களைப் பெற்று வந்த யாழ் நூலகத்திற்கு தேவையில்லை என்றே நாம் கருதுகிறோம். இனியும் எக்காரணத்தையும் கூறாது உடனடியாக நூலகத்தைத் திறந்து பொது மக்களின் பாவனைக்கு உடன் அனுமதியுங்கள். இது இன்றைய அவசர தேவையாக உள்ளது. இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

ரையாடப்பட்டு வருகிறது. இதுபற்றி விரைவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் என்றும் அவர் கூறினார். (ந-6)

இப் பட்டமளிப்பு விழா ஜனவரி மாதம் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

---

## சமாதானத்தின் விரோதிகளை...

ஏற்பட்டுள்ள அரசியல் இழுபறி நிலைகளினால் சமாதானமும் இழுபறி நிலையை அடைந்துள்ளது.

இந்த அரசியல் இழுபறிநிலை மூலம் சமாதானத்தின் விரோதிகள் யார் என்பதை சர்வதேச சமூகம் இன்று நன்கு உணர்ந்திருக்கும். எமது விடுதலைப் போராட்டம் நீதியாகவும் நேர்மையாகவும், உண்மையாகவும் நடைபெற்றதினாலேயே இன்று நாம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளோம். இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அமைதியான முறையில் தீர்வு காணப்போகிறோம் என்று கூறும் சிங்களத் தலைமைகள் எமது விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றன.

சிங்களத் தலைமைகள் சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னலை உருவாக்குவதற்கு முயன்று வருகின்றன. இந்த மண்ணின் சொந்தக்காரர்களான எங்களின் ஆதரவோ, ஒத்துழைப்போ இன்றி எந்த விதமான ஒப்பந்தங்களும் செய்வதற்கு எமது மக்கள் இடமளிக்க மாட்டார்கள்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் அவர்கள் எந்த விதமான ஒப்பந்தங்களையும் செய்யலாம் ஆனால் தமிழீழத் தேசத்தில் வடக்குக் கிழக்கும் இணைந்த எமது தாயகப்பிரதேசத்தில் எமது மக்களின் அனுமதியின்றி எந்த ஒப்பந்தங்களையும் செய்ய முடியாது. இதனை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

தென்னிலங்கை சிங்களத் தலைமைகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள அதிகார இழுபறிப் போட்டிக்கு எமது மக்களின் எதிர்காலத்தை, அபிலாஷைகளை நாம் ஒரு போதும் பலியிடமாட்டோம். முடிந்தளவு பொறுமையை நாம் கடைப்பிடிப்போம்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் போக வேண்டும் என்று கூறிவந்த சர்வதேச சமூகம் இன்று அரசாங்கம் சமாதானப் பேச்சு வார்த்தையைத் தொடர வேண்டும். தென்னிலங்கையில் நிலவும் அதிகார இழுபறிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும், ஜனாதிபதியும், பிரதமரும் விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அழுத்தம் கொடுத்து வருகிறது என்று சுட்டிக்காட்டிய அவர், விடுதலைப் புலிகள் பலமான நிலையில் இருந்து கொண்டே எமது மக்களின் உரிமைகளுக்காக நாம் அரசியலில் காய்களை நகர்த்த வருகிறோம் என்று கூறினார். (ம)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.